# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 233 ஆடி 04 ஆம் நாள் சனிக்கிழமை 20 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## தேர்தலில் களமிறங்க தயார் நிலையில் சஜித்

### தமிழருக்கு தீர்வு வழங்குவதே முதல் இலக்கு என்றும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20
அரச தலைவர் தேர்தலில் களமிறங்குவதற்கு எந்நேரமும் தயாராகவே இருக்கின்றேன். அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதே எனது இலக்கு. வடக்கு, கிழக்கு மக்களின் ஏகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியே அரசியல் தீர்வைத் தயாரிப்பேன்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார். 21

## அலோசியஸ் உட்பட எண்மருக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 20
மத்திய வங்கிப் பிணை முறி மோசடி வழக்கில் அர்ஜுன் அலோசியஸ் உட்பட 8 பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான மனு நேற்று நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பத் அபேகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 02

## புலமைப்பரிசில் ஓகஸ்ட் 4 க.பொ.த. உயர்தரம் ஓக. 5

கொழும்பு, ஜூலை 20
க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை நடைபெறும் என்றும், அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பரீட்சைகள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் கல்வி அமைச்சு தெரிவித் 04

## கோதுமை மா மற்றும் பாண் விலைகளில் மாற்றமில்லை

கொழும்பு, ஜூலை 20
450 கிராம் பாணின் விலையை 5 ரூபாவால் அதிகரிக்கும் தீர்மானம் மீளப் பெறப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. அதேவேளை, கோதுமை மாவின் விலையும் அதிகரிக்கப்படாது என்றும் தெரிவிக்கப் 21

## அவன்கார்ட் விவகாரம்: மூவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 20
அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக்கு களஞ்சியசாலை வழக்குத் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களில் மூவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. காலி பிரதான நீதிவான் ஹர்ஷன கெகுனவெல இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.
ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, கரு 21

## சிறுமியைக் கடத்தி வன்புணர்வு 27 ஆண்டுகள் கடூழியச் சிறை

### வவுனியா மேல் நீதிமன்று தீர்ப்பு

வவுனியா, ஜூலை 20
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் பதின்ம வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று மூன்று தடவைகள் வன்புணர்ந்த குற்றவாளிக்கு 27 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் தீர்ப்பளித்தார்.
எதிரி சிறுமியைக் கடத்திச் சென்ற குற்றத்துக்கு 3 ஆண்டுகளும், வன்புணர்த்தமைக்கு 12 ஆண்டுகளும் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தச் சிறைத் தண்டனையை குற்றவாளி ஒன்றின் 21

## எல்லாப் பழியும் எனக்கா? மனோ கணேசன் சீற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
முல்லைத்தீவு நீராவியடி விகாரை தொடர்பான உண்மையை வெளிக் கொண்டு வந்துவிட்டேன். அதனையும் அகற்றுவதற்கான நடவடிக்கையும் நானா எடுக்க 21

## கூட்டத்துக்குச் சம்பந்தனுக்கு அழைப்புக் கொடுக்கவில்லை

### ஏற்றுக் கொள்கிறார் மனோ

யாழ்ப்பாணம், ஜூலை 20
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு தான் நேரடி 02

## மன்னிப்பு கேட்டார் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 20
பௌத்த தேரர்களை அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தார் என்று பல தரப்புக்களின் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று மகாநாயக்க தேரர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.
நேற்றுக் கண்டிக்குச் சென்ற அவர் மகாநாயக்க தேரர்களின் கால்களில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கோரியுள்ளார்.
தனதுகருத்து பௌத்த பீடங்களுக்கு அவமதிப்பை ஏற்படுத்தியிருந்தால் மன்னிப்பைப் பகிரங்கமாகக் கோருகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அதற்கு முன்னதாக அவருக்கு 02



## ஓட்டோவின் மீது மரம் விழுந்து தாய், மகள் உட்பட 3 பேர் சாவு

### சீரற்ற காலநிலையால் இதுவரை நாட்டில் ஐந்து பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 20
திடீரென மரம் முறிந்து விழுந்ததில் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த தாய், மகள் உட் 04

## நல்லூருக்குச் செல்லும் பக்தர்கள் சோதனையின் பின்னே அனுமதி

### முன்னாயத்தக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20
நல்லூர் கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழாவின்போது, ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அனைவரும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவார்கள். இந்த நடைமுறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.
இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் 21

## மணியின் உறுப்புரிமை வழக்கு: ஆவணங்களால் சிக்கல் நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி தொடர்பாக வி.மணிவண்ணனுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் மணிவண்ணனால் மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் உண்மையானவையா என்பதைக் கண்டறிய, பதிவாளர் நாயகத்திடம் இருந்து பிரதிகளைப் பெற்று, சமர்ப்பிக்கப்பட்ட 04

## தொடருந்து விபத்தில் இரு இளைஞர்கள் சாவு

### கிளிநொச்சியில் நேற்றிரவு சோகம்

கிளிநொச்சி, ஜூலை 20
கிளிநொச்சியில் நேற்று இரவு நடந்த தொடருந்து விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து கிளிநொச்சி, அறிவியல்நகரில் 02


யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)
✓ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✓ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
For more information: 0777 174 443
Entry requirement
HND / any Equal Qualification in the similar study
BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk


# எலுமிச்சை விளக்கேற்றி வழிபட்டால் என்ன நன்மை தெரியுமா..?



எலுமிச்சை தீய ஆவிகளை நீக்கும் தந்திரத்தில் பயன்படுகிறது. தீய ஆவிகளை அகற்ற எழுமிச்சையானது திரி சூலம், மூர்த்திகள், யாக குண்டம் மற்றும் கதவின் இரு புறங்களிலும் வைக்கப்படுகிறது. கண் திருஷ்டியை நீக்கி பாதுகாப்பை அளிக்க இது மிளகாயுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது. மேலும் இதனை நோய்வாய்பட்ட மக்களின் அருகில் தொங்கவிடும் போது, இது தீய ஆவிகளை விரட்டி அவர்களை நோய்களிலிருந்து குணமடைய செய்யும் என்று நம்பப்படுகிறது.!

**எலுமிச்சை விளக்கு எப்படி செய்ய வேண்டும்.?**

துர்கா பூஜையின் போது எலுமிச்சை விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. எலுமிச்சை தோல் மெல்லியதாக இருக்க வேண்டும். (ஒற்றை எண்களில், அதிகபட்சம் 9) அதனை நெகிழ்வாக உருட்டிக் கொள்ள வேண்டும். அதனை செங்குத்தாக சரிபாதியாக வெட்டி கொள்ள வேண்டும், கிடைமட்டமாக வெட்டக் கூடாது. சாற்றினைப் பிழிந்து வெளியேற்ற வேண்டும். பின் அந்த பாதி எலுமிச்சையை உள்புறம் வெளியே வருமாறு திருப்பி, ஒரு கிண்ணம் போல் செய்து கொள்ள வேண்டும். பின் அதனை எண்ணெய் அல்லது நெய் கொண்டு நிரப்பி திரியிட்டு விளக்கேற்ற வேண்டும்.!

**எலுமிச்சை விளக்கின் முக்கியத்துவம்.!**

எலுமிச்சை எம்மை ஒத்ததாகும். மேலும் நாம் எமது உட்பகுதியைக் கடவுளுக்குக் காட்ட வேண்டும். மாயை, பேராசை, காமம் மற்றும் கோபம் ஆகியவற்றை கடவுளுக்கு முன்பாக வெளியே எறிய வேண்டும். எலுமிச்சைக்கு உள்ளே இருக்கும் வெள்ளைத் தோல் எமது தூய மனதையும், இருண்ட பகுதி (மறைந்திருக்கும் பச்சை விதைகள்) மாயையையும் குறிக்கும்.

**விளக்குத் திரியின் முக்கியத்துவம்.!**

வாழைத் தண்டில் செய்யப்பட்ட திரியானது குற்றங்களையும், ஜென்ம பாவங்களையும் நீக்குகிறது. பருத்தியில் செய்யப்பட்ட திரி நல்ல அதிர்ஷ்டத்தையும், தாமரை தண்டில் செய்யப்படும் திரி முற்பிறவி வினைகளை நீக்கி வளமான வாழ்க்கையை நிறுவவும், வெள்ளை பூண்டு வகை செடியில் செய்யப்படும் திரி அதிர்ஷ்டம் மற்றும் சொத்துக்களைப் பெருக்கவும், புதிய மஞ்சள் பருத்தி துணி, பராசக்தியின் அருளைப் பெற்று சிக்கல்களிலிருந்து விடுபடவும் மற்றும் புதிய சிவப்பு பருத்தி துணி திருமணம் மற்றும் குழந்தை பெறும் தடைகளை நீக்கி மாயம், மந்திரம், தந்திரம் போன்றவற்றிலிருந்து விடுபடவும் உதவுகின்றது.!

**எந்த நாள்களில் விளக்கேற்றுவது சிறந்தது?**

நோய்களால் அதிகம் அவஸ்தைப்படுவோர், அது விரைவில் குணமாக ஞாயிறு மாலை ராகு காலத்திலும், குடும்பத்தில் பிரச்சனைகள் அதிகம் இருந்தால் செவ்வாய் கிழமையன்று ராகு காலத்திலும், குடும்பம் மற்றும் தனிப்பட்ட வேறுசில வேண்டுதல்களுக்கு வெள்ளிக்கிழமை அன்று ராகு காலத்திலும், 2 எலுமிச்சை விளக்கேற்றி அம்மனை மனமுருகி வேண்டினால், பிரச்சினைகள் அனைத்தும் நீங்கி, செழிப் போடும் சந்தோஷமாகவும் வாழலாம்.



# ஜூலை மாத ராசிபலன்கள் - 2019



சனிபகவானை ராசி நாதனாகக் கொண்ட கும்ப ராசிக்காரர்களே. ராசி நாதன் சனி வக்ரமடைந்து கேது உடன் இணைந்திருக்கிறார். ஆறில் செவ்வாய் இருப்பதால் நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும். சிறு தூர பயணங்களால் சிறு காயங்கள் வரும் கவனம் தேவை. நெருங்கிய நண்பர் ஒருவர் பகையாக மாறலாம். உங்களிடம் வேலை செய்யும் வேலைக்காரர் உங்களுக்கு எதிராக மாறலாம். புதிதாக எந்த கடனும் வாங்க வேண்டாம். கடனை மைத்ர முகூர்த்த நேரத்தில் அடைக்கப் பாருங்கள். சூரியன் மிதுனத்தில் ராகு சுக்கிரன் உடன் இணைந்திருப்பதால் சிறு தடங்கல்கள் அதிகம் ஏற்படும். ஐந்தாம் வீட்டில் மூன்று கிரகங்களின் கூட்டணியால் ஒருவித மன உளைச்சல், பயம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அதே நேரத்தில் வருமானமும் முன்னேற்றமும் அதிகரிக்கும். கும்பம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் 11ஆம் வீட்டில் சனி கேது இருக்கின்றனர். குரு 10ஆம் வீட்டில் இருப்பதால் வேலையில் சில பிரச்சினைகள் ஏற்படும். புதிய வேலைகள் தேட முயற்சி செய்வீர்கள். ஆறாவது வீட்டில் புதன் செவ்வாய் இருப்பதால் அந்த இடத்தில் ஏதோ பிரச்சினை ஏற்படும் என்றாலும் பத்தாவது வீட்டில் இருந்த குரு ஆறாம் வீட்டை பார்ப்பதால் நன்மைகள் அதிகம் நடைபெறும். உங்க பாக்யாதிபதி சுக்கிரன் ஆறாம் வீட்டில் அமரப்போகிறார். அவர் 17ஆம் திகதி ஆறாம் வீட்டில் அமரப்போவது சாதகம். கும்ப ராசிக்காரர்களுக்கு யோகமான கால கட்டம். பிசினஸ்ல இருந்த தடைகள் விலகும். நல்ல காலம் பொறந்துருச்சி என்று பாடுவீர்கள். அருகில் உள்ள பெருமாள் கோவிலுக்கு போய் அர்ச்சனை செய்யுங்கள். பழனி, குன்றக்குடி, திருச்செந்தூர் முருகனை நீங்கள் வழிபட ஆபத்துக்கள் நீங்கும். செவ்வாய்கிழமை துவரம்பருப்பு தானம் செய்யுங்கள். நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுபவர்களால் தொந்தரவுகள் வரலாம். எதிரிகளால் தொந்தரவு வரும். குரு பார்வை நான்காம் வீட்டில் இருப்பதால் உயர்கல்வி யோகம் தேடி வரும். இந்த மாதம் எது நடந்தாலும் நன்மையில்தான் முடியும்.




## தொடர்ச்சிகள்

### கூட்டத்துக்குச்...

யாக அழைப்பு விடுக்கவில்லை என்று அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கன்னியா விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அரச தலைவருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு அமைச்சர் மனோகணேசனால் ஒழுங்குபடுத்தப்பட்டது. கடந்த புதன் கிழமை இரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மனோகணேசனால் அறிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எந்தவொரு தரப்பினரும் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கவில்லை. அதன் காரணமாகவே கூட்டமைப்பு கலந்து கொள்ளவில்லை என்று கூறியிருந்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோகணேசனிடம் கேட்ட போது, நான் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு தெரியப்படுத்தவில்லை. கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு அறிவித்தேன். அதை அந்தக் கட்சியின் உத்தியோகபூர்வ அழைப்பாக எடுத்துக் கொள்வார்கள் என்று நினைத்தேன் என்று குறிப்பிட்டார். (ஒ.5)

### அலோசியஸ்...

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் 10ஆவது பிரதிவாதியான அஜகான் கார்திய புஞ்சிஹேவா ஆகியோர் நேற்று மன்றில் முன்னிலையாகவில்லை. அவர்கள் சார்பாக சட்டத்தரணிகளும் முன்னிலையாகவில்லை.

நீதிமன்றில் முன்னிலையான ஏனைய 8 பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர், அவர்களை 10 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

அதேநேரம் பிரதிவாதி களுக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டது. அவர்களின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் உத்தரவிடப்பட்டது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களத்தால் பிரதம நீதியரசரிடம் அனுமதி கோரப்பட்டிருந்த நிலையில் அதற்கு தலைமை நீதியரசர் அனுமதி வழங்கினார்.

அதையடுத்து மத்திய வங்கியின் 'முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன மற்றும் பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனம் உட்பட 10 பிரதிவா திகளுக்கு எதிராக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-22)

### மன்னிப்பு...

சுமார் ஒரு மணி நேரம் தேரர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தான் மகாநாயக்க தேரர்களை அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கவில்லை என்றும், அதனால் அவர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்திருந்தார்.

தற்போது நாட்டில் கூக்குரல் இட்டுத் திரியும் 90க்கும் அதிகமான பிக்குகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்பட்டவர்கள் எனவும் அதனால் மன அழுத்தங்களுக்கு உட்பட்டதாலேயே இவ்வாறு தேரர்கள் குரோதத்துடன் காணப்படுகின்றனர் என்று சமூக வலைத்தளத்தில் இராஜாங்க அமைச்சர் ரஞ்ஜன் ராமநாயக்க பதிவிட்டார் என்று கூறப்படுகின்றது. அதையடுத்து அவருக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. (எ)

### தொடருந்து...

இரவு 8.50 மணியளவில் நடந்துள்ளது.

கிளிநொச்சி, இந்திரபுரத்தைச் சேர்ந்த செ.சஜீவன் (வயது-24), கிளிநொச்சியைச் சேர்ந்த ரி.நிலவன் (வயது-18) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தபால் தொடருந்துடன் மோதியே இளைஞர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர். இளைஞர்கள் இருவரும் தொடருந்துக் கடவையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோதே தொடருந்துடன் மோதுண்டனர் என்று கூறப்படுகின்றது.

விபத்துத் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விபத்தை அடுத்து தொடருந்து மீண்டும் கிளிநொச்சித் தொடருந்து நிலையத்துக்குச் சென்று சடலங்களை ஒப்படைத்த பின்னர் பயணத்தைத் தொடர்ந்தது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(எ-6.35,105)



## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் J.S.சத்தியநாதன்
(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்,
பனை அபிவிருத்திச் சபை)

தோற்றம் 29.05.1944 — மறைவு 20.07.2001

சத்தியத்தின் நாதனாக
இயேசு பிரானின் போதனையாளனாக
வாழ்ந்தவராம் எங்கள் அப்பப்பா
நாமும் அதுபோல வாழ
வந்தொருமுறை தரிசனம் தாரும்
அப்பப்பாவே

பேரப்பிள்ளைகள் -
ச.யோன் மிருதுளன், ச.யோன் மிருனாளன்
மடத்துக்கடவை, அல்வாய் மேற்கு,
அல்வாய். 077 662 4408

(CS/2676/11.17)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

NCBGZ-1365 இலக்கமுடைய இலக்கத்தகடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் உரிய ஆவணங்களைக்காட்டி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு - 077 772 2218

## வேலை வாய்ப்பு

தமிழகத்தின் பிரபல
மகப்பேற்று
மருத்துவமனையின்
இலங்கைக் கிளையில்
தொடர்பாளராகப் பணியாற்ற
விரும்பும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
பெண்கள் அழைக்கவும்

075 567 1219
infopfrcsl@gmail.com

# முத்து

- சிப்பிக்குள் தோன்றும் கெட்டியான பொருளே முத்து எனப்படுகிறது.
- முத்து என்பது ஆபரணங்களில் பயன்படுத்தப்படும் ஒருவகைப் பொருளாகும். இது இயற்கையில் நீரில் வாழுகின்ற முசெல் (mussel) வகையைச் சேர்ந்த முத்துச்சிப்பி போன்ற சில உயிரினங்களிலிருந்து பெறப்படுகின்றது.
- 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இயற்கையாக உருவாகும் முத்துக்களே பயன்பட்டன. ஆட்கள் நீருக்குள் இறங்கி முத்துச்சிப்பிகளைச் சேகரிப்பார்கள். இது முத்துக்குளிப்பு எனப்பட்டது.
- இயற்கை முத்துக்கள் விளையும் இடமாகப் பண்டைக்காலத்திலேயே புகழ் பெற்றிருந்த இடங்கள் பலவுள்ளன. அரேபியக் குடா, இந்தியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, பல்வேறு பசிபிக் தீவுகள், வெனிசுலா, மத்திய அமெரிக்கா ஆகியவற்றின் கரைகளை அண்டிய கடற் பகுதிகள் இவற்றுள் அடங்குவன.
- சிப்பிகளில் மிகச் சிலவற்றிலேயே முத்துக்கள் கிடைக்கும். இதனால் முத்து அரிதில் கிடைப்பதொன்றாகவும், விலை கூடியதாகவும் இருந்தது.

## அந்தியேட்டி அழைப்பு



பிறப்பு 07 . 11 . 1944 — மறைவு 20 . 06 . 2019

அமரர் கணபதிப்பிள்ளை நவரட்ணம்

எங்கள் குலவிளக்காய் உதித்த நீ
எங்களைப் பாதியிலே விட்டுப் போவதற்கா?
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி முப்பத்தொருநாட்கள்
ஆனாலும் என்றும் நீ எங்கள் நெஞ்சில் வாழ்ந்திடுவாய்

இன்று (20.07.2019) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

63/3 கொண்டலடி வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

## அன்புடன் அழைக்கின்றோம்



செல்லப்பாச்சி குருபூசை

அன்னையின் ஏழாவது குருபூசை திருநெல்வேலி கிழக்கில் வெள்ளைப் பிள்ளையார் கோயிலில் அமைந்துள்ள சடையம்மா மடத்தில் 24.07.2019 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியிலிருந்து நடைபெறவுள்ளன. இந்த நிகழ்ச்சிகளிலும் கல்வியலாளர்களுக்கு பொன்னாடை போர்த்தல், நிவாரணம் வழங்குதல் மகேஸ்வர பூசையிலும் கலந்து கொள்ளும்படி நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் சமூகசேவை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

சாட்டர் லயன் வ.பரமசிவம் ஜே.பி.
குடும்பத்தினர்.
நல்லூர்.

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு



அமரர் திருமதி
மனோன்மணி
சுவேந்திரன்
(கிரிஜா)
(ஆசிரியர் -
யா/விக்ரோறியா
கல்லூரி)

கடந்த 18.06.2019 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் 33 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று (20.07.2019) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் **"தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில்"** நடைபெறவுள்ளது. எனவே அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று பங்குபற்றுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி, வடலியடைப்பு — குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## வீரகத்தி கணபதிப்பிள்ளை



தாயின் மடியில் 08.09.1935 — காலன் கையில் 18.07.2019

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் இல 168/2 டச்சு வீதி, சாவகச்சேரியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி கணபதிப்பிள்ளை 18.07.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - பருபதம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னம்மா, சேதுப்பிள்ளை,முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காண்டீபராஜா, ஐங்கரன்(லண்டன்), சேகரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியவதி, குகதர்ஷினி(லண்டன்), கிரிசாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சன் (லண்டன்),பிரியங்கா, கேதாரன், தசாங்கன், விதூரன், தாட்சாணி, அக்ஷயா (லண்டன்), அதிஷயா(லண்டன்), ஆதுயன் (லண்டன்), ஸ்ரவ்யா(லண்டன்), சமீகா (லண்டன்) ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் இல.168/2, டச்சுவீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 9.00 மணியளவில் சரசாலை வடக்கு கொம்பிக்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 168/2, டச்சுவீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

காண்டீபராஜா
077 360 4014

ஐங்கரன் } லண்டன் : 0044 788 8847 816
சேகரன் } லண்டன் : 0044 777 299 4590

## மணியின்...

ஆவணங்கள் போலியானவை என கண்ட றியப்பட்டால் அவற்றைத் தயாரிக்க உதவிய வர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று நீதிமன்று கேள்வி எழுப்பியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணன் சபை எல்லைப் பரப்புக் குள் வசிக்கவில்லை என்றும், அவரது உறுப்புரிமை செல்லுபடியற்றது என்று அறிவிக்க வேண்டும் என்று கோரி வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது. அதையடுத்து மணிவண்ணனின் சபை உறுப்புரிமைக்கு இடைக்காலத் தடை விதிக்கப் பட்டது. இந்த வழக்குத் தொடர்ந்து நடந்துவந்த நிலையில் தற்போது இறுதி நிலையை அடைந்துள்ளது. தீர்ப்புக்கான திகதியைத் தீர்மானிப்பதற்கான இந்த மாதம் 30 ஆம் திகதி வழக்குத் திகதியிடப்பட்டிருந்தது. எனினும் சிறப்புக் காரணத்துக்காக நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன்போது, மாவட்டத்தில் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டமை உள்ளிட்ட ஆவணங்களை ஆணைக்குழுவிடம் இருந்து பெறுவதற்கும், காணி கொள்வனவு செய்தமைக்கான சான்றான இறுதித் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படும் விடயம் மற்றும் இரண்டு ஆண்டுகளாக வாடகை அடிப்படையில் குடியிருப்பதான நொத்தாரிசின் ஆவணங்கள் தொடர்பில் உறுதியின் மூலப் பிரதியைப் பதிவாளர் நாயகத்திடம் கோரி முலப் பிரதியைப் பெறுவதுடன், சட்டத்தரணியும் மூலப் பிரதியைச் சமர்ப்பிப்பதற்குச் சம்மதம் கோரப் பட்டது.

வாடகை ஒப்பந்தமாகச் சமர்ப்பிக்கப் பட்ட ஆவணத்தில் நொத்தாரிசின் ஒப்பம் உள்ளபோதும், பதிவாளர் நாயகத்திடம் பதிவு செய்த இலக்கத்துடன் கூடிய றப்பர் முத்திரை பொறிக்கப்படவில்லை. அந்த வாடகை ஒப்பந்தம் பதிவாளர் செயலகத்தின் பதிவுக்காக அனுப்பப் பட்டுப் பகிரப்பட்டதா எனப் பரீட்சிப்பதற்குப் பதிவாளர் நாயகத்திடம் அதை அனுப்பி உறுதி செய்யவும், சட்டத்தரணி தன்னிடம் உள்ள ஆவணத்தின் மூலப் பிரதியைச் சமர்ப்பிக்கவும் கோருவதற்குத் தீர்மானிப்பதால் அது தொடர்பாக இரு தரப்பின் கருத்துக்களும் கோரப்பட்டன.

வழக்காளர் தரப்புச் சட்டத்தரணியான அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அதற்குத் தனது ஒப்புதலைத் தெரிவித்தார். வி.மணிவண்ணன் தரப்புக்காக நேற்று மன்றில் முன்னிலையான உதவிச் சட்டத்தரணி சந்தர்ப்பம் கோரினார். தமது தரப்பு மூத்த சட்டத்தரணி பிறிதொரு வழக்குக்காகச் சென்றுள்ளதால் தமது தரப்புக் கருத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் கோரினார். அதையடுத்து நீதியரசர்களான யசந்த கொதாகொட, அர்சுனா ஒபயசேகர ஆகியோர் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு வழக்கை ஒத்தி வைத்தனர். (ஏ-105)

## புலமைப்பரிசில்...

துள்ளது.

அதேவேளை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத் திட்டத்துக்கு அமைய ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 229 மாணவர்களும், பழைய பாடத் திட்டத்துக்கு அமைவாக ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 475 மாணவர்களும் தோற்றவுள்ளனர். மொத்தமாக 3 லட்சத்து 37 ஆயிரத்து 704 பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றவுள்ளனர் என்றும், 2 ஆயிரத்து 678 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிங்கள மொழி மூலம் 2 லட்சத்து 55 ஆயிரத்து 529 மாணவர்களும், தமிழ் மொழி மூலம் 83 ஆயிரத்து 840 மாணவர்களும் தோற்றவுள்ளனர். மொத்தமாக 3 லட்சத்து 39 ஆயிரத்து 369 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்றும், 2 ஆயிரத்து 995 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும் என்றும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ)

## ஓட்டோவின்...

பட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் ஹம்பாந்தோட்டையில், சூரியவெவ 11ஆம் மைல் கல் பிரதேசத்தில் நடந்துள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது சீரற்ற காலநிலை காரணமாகத் திடீரென மரம் முறிந்து விழுந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. 31 வயதுடைய தாய், மகள் மற்றும் மற்றொரு பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் பல இடங்களில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவிலும் வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு சிறுமிகளான இரட்டைச் சகோதாரிகள் நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்தனர். சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர். (ஏ-22)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. இசைமாணி / நடனமாணி - இரண்டாம் வருடத் தேர்வு - 2015 (இறுதிச் சந்தர்ப்பம்)
2. இசைமாணி / நடனமாணி - மூன்றாம் வருடத் தேர்வு - 2015
3. இசைமாணி / நடனமாணி - நான்காம் வருடத் தேர்வு - 2014 & 2015

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300/= இற்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 70 /= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 செ.மீ X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 19.08.2019 (திங்கட்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளிலும் மேற்படி இணையத்தள முகவரியிலும் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்
19.07.2019

### Your Royal Auto Mobiles
### வேலையாள்கள் தேவை

எமது வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு வேலையாள்கள் தேவைப்படுவதால் உடன் அழையுங்கள்.

தொடர்புக்கு :- 077 776 3533
077 943 7486

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வாகன உதிரிப்பாகம் மற்றும் மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். உதிரிப்பாகங்கள் தொடர்பான அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக ஆர்வமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. **வயது எல்லை 35**

**ஆனந்த் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்**
**021 221 6887, 021 221 4605, 076 717 3234**

### நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்
### விலைக்கேள்விக்கான கோரல்

01. வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
02. விலைக்கேள்வியானது தேசியபோட்டிக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப்பினும் 04/2016(1) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வியாபார பதிவினை வடமாகாண நிர்வாக எல்லைக்குள் கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்க முடியும்.
03. விலைக்கேள்வியாளர்கள் கறுப்பு பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(1) ம் இலக்க 30.09.2016ம் திகதிய பொது நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார / கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல்.
04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
05. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன், வீதி பண்ணை, (தொலைபேசிஇல :0212224782 தொலைநகல்இல. 0212057103) என்னும் முகவரியில் வேலையின் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து பி.ப.16.00மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணத்தை பரிசீலனை செய்யலாம்.
06. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியான விலைக்கேள்வி ஆவணத்தின் பூரணமான தொகுதியொன்றை வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி பண்ணை, (தொலைபேசி இல:0212224782 தொலைநகலஇல. 0212057103) என்னும் முகரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 22.07.2019 முதல் 02.08.2019 வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் கீழே அட்டவனையில் குறிப்பிப்பட்டவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 05.08.2019 ம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர் , திணைக்கள பெறுகைக்குழு வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி பண்ணை, என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள் மூடியவுடன் அவைகள் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி பண்ணை என்னும் முகவரியில் 30.07.2019 அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.
09. கீழே அட்டவணையில் குறிப்பிட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | பெறுகைக் குழு | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிக்கப் படாத தொகை | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| NNP/30/BW/CS/PSDG/2019 | சுற்றுமதில் அமைத்தல், சான்று பெற்றபாடசாலை, அச்சுவேலி | திணைக்கள பெறுகை குழு. | 1.840 | 02 மாதம் | C8 அல்லது C9 (கட்டடங்கள்) | 2,000.00 | 18,400.00 | 03.11.2019 வரை |

**தி.விஸ்வரூபன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**

### குத்தகை அடிப்படையில் நெற்காணி பகிரங்க ஏலத்தில் வழங்குதல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமான சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை என்ற முகவரியில் உள்ள 60 பரப்பு நெற்காணி குத்தகை அடிப்படையில் பகிரங்க ஏலத்தில் வழங்குவதற்கு ஆலய பெறுநர் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**காலம்:- 10.08.2019 (சனிக்கிழமை)**
**காலை 10.00 மணி**
**இடம் :- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றல்.**

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் ரூபா 500.00 இனை மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக 10.08.2019 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பணமாகச் செலுத்திப் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும்.

ஏலத்தில் தேர்வு செய்யப்படுவோர் 15.08.2019 ஆம் திகதிக்கு முன்னர் முழுத்தொகையினையும் செலுத்தி குத்தகை உறுதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பகிரங்க ஏலவிற்பனை நடவடிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் பெறுநர் குழுவ்க்கே உள்ளது.

**பெறுநர் குழு,**
**மருதடி விநாயகர் ஆலயம்.** (IN/10726)(11,17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 10 . 1937

மறைவு 18 . 07 . 2019

### திருமதி பரஞ்சோதி முருகேசு

நவாலி கிழக்கு, முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த திருமதி பரஞ்சோதி முருகேசு 18.07.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லர் முருகேசுவின் அன்பு மனைவியும், சிவராசா (பிரான்ஸ்), குணராஜா (பிரான்ஸ்), சிவானந்தராஜா (பிரான்ஸ்), சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி), கிருஷ்ணராஜா (பிரான்ஸ்), சிவனேஸ்வரி (பிரான்ஸ்), தவேஸ்வரி (வட்டு - வடக்கு) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2019) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகமூர்த்தி கோயிலடி,**
**நவாலி கிழக்கு.**

(CS/26779)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 11 . 1950

மறைவு 18 . 07 . 2019

### நாகலிங்கம் இராசையா

புத்தூர் வீரவாணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசையா 18.07.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயறாதிகா, ஜெயலதா, ஜெயலிதா, புஸ்பலதா, ஜெயக்குமார், ஜெயரூபன், ஜெயகரன்(சுவிஸ்), ஜெயராணி(கனடா), ஜெயகீதா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான அழகம்மா, நவரத்தினம் மற்றும் தானையா, சிற்றம்பலம், நவமணி, மகேஸ்வரி, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், தங்கச்சிப்பிள்ளை, நவரத்தினம், அமரசிங்கம், கமலவேணி, சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயானந்தராசா, கிருஸ்ணகுமார், மாயராசா, சிவபாலன், லதாறஞ்சினி, உஷா, சுமதி(சுவிஸ்), கருணாகரன்(கனடா), கலைச்செல்வன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தசீபன், தசீலா, றஜீனா, தனுஷியா, தர்ஷனா, தர்ஷிகா, தாட்ஷாயினி, கரிகிருஸ்ணன், கீர்த்தீபன், சசீபன், சஜந்தன், ஜெனுஷன், விதுஷா, விஜிதா, பவிஷன், விஜிந்தன், விதுஷன், மதுஷன், மகிழினி, ஜெனுசிகன், ஜெசிபன், தாரகா, டிலக்ஷனா, சிந்துஜன், சஜந்தன், அபிநயா, சிந்துஜன், ஜெனுசன், சர்மிதா, சுகன்ஜா(சுவிஸ்), சுபாகரன் (சுவிஸ்), கம்ஷிகன்(சுவிஸ்), கம்ஷிகா(கனடா), கம்ஷனா(கனடா), அபிஷிகா(கனடா), அஸ்விகா (கனடா)ஆகியோரின் ஆசைமிகு பேரனும் மேனகா, ஜானகா, தேனுகா, ஜெனகன், தனுஷிகன், சானுகா ஆகியோரின் செல்லப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரவாணி,**
**புத்தூர்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தவமலர் பரந்தாமன்



மலர்வு 27.12.1938

உதிர்வு 14.07.2019

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமலர் பரந்தாமன் 14.07 2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரந்தாமனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, புஸ்பமலர் மற்றும் தங்கமணி, இங்கிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் இரத்தினேஸ்வரி, கனகசிங்கம், உதயகுமார், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, பத்மநாதன் மற்றும் சரஸ்வதி, யோகராணி, யோகராசா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிறீகாந்தன் (ஜேர்மன்), மேயராணி (ஜேர்மன்), ஜெயராணி (ஜேர்மன்), சிறீரூபன் (கனடா), சிறீகுமார் (கனடா), பிறேமினி (கனடா), வசந்தராணி (கனடா), கிருபைராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், நேசமலர், உதயமலர், அபிராமி, பாஸ்கரன், இரத்தினசிங்கம், சரவணபவன், சிவபதி, நித்தியானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், யசிந்தா, சுகித்தா, தீபன், புருஷோத், ராம், வைஷ்ணவி, சௌமியா, சாம், சாரங்கன், தாரணி, பாமினி, நீரஜா, சொருபலக்ஷ்மி, வித்தியானந்தன், நிரோஜன், ஸ்ரெபினி, யோனத்தன், சிந்தியா, சயந்தவி, சூரியா, கனிஸ்ரன், கீர்த்தனன், டிலான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நேகாசக்தி, மீரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

ஆடி மாத
ஆடைத்
திருவிழா

புத்தம் புதிய
ஆடைத்
தெரிவுகள்



காஞ்சிபுரம் பட்டுப் புடைவைகள்
திருமணப் பட்டுப் புடைவைகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
மொடர்ன் டொப்
டெனிம் டொப்
மொடர்ன் சூட்
பார்ட்டி புரொக்
சேட், T-சேட், றவுசர்



**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 13.07.2019 - 28.07.2019**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
இந்தியன் செலக்ஷன்

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

# 31ஆம் நாள் நினைவலைகளும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

கடந்த (21.06.2019) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர்**
**செல்லையா சிவலிங்கம்**



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தோர் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர் மற்றும் தொலைபேசியில் ஆறுதல் கூறியோர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் நினைவில் :
**குடும்பத்தினர்.**

இல. 55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

மைதிலி நகைமாடம்(Pvt)Ltd.
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 077 376 8952

(CS 26387) (14.17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 . 06 . 1925 | 21 . 06 . 2019 |

## பொன்னம்பலம் நாகமுத்து

**திதி: பஞ்சமி**

*"முன்னின்றருளும் முடிகின்ற காலத்து*
*நன்னின்று உலகில் நடுவுயிராய் நிற்கும்*
*பின்னின்றருளும் பிறவியை நீக்கிடும்*
*முன்னின்றெனக் கொடு முக்தி தந்தானே"*

கடந்த 21.06.2019 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி பொன்னம்பலம் நாகமுத்து அவர்களின் துயரச் செய்திகேட்டு ஓடோடிவந்து ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும், சதுர உதவிகள் செய்தோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


நாளை (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது அந்தியேட்டிக் கிருத்திய கிரியைகள் அன்னாரது வீட்டில் நடைபெறவிருப்பதால் அந்தருணத்தில் தாங்களும் தங்களது குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தனிப் பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பாதாள வைரவர் கோவிலடி,**
**கச்சாய் தெற்கு, கொடிகாமம்.**

**குடும்பத்தினர்.**

# நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 04 . 1967 | 24 . 05 . 2019 |

அமரர்

## வயிரமுத்து யோகராசா (யோகன்)

எமது குடும்பத் தலைவர் அமரர் வயிரமுத்து யோகராசா அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அரசியல் பிரமுகர்கள், கல்விசார் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர், பொது முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உற்றார், உறவினர் நண்பர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள், மதகுருமார்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகைளத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை பன்னாலை வறுத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று (20.07.2019) மு.ப. 11.00 மணியளவில் நடைபெறுவதால் அந்நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**பன்னாலை,**
**தெல்லிப்பழை.**

**குடும்பத்தினர்.**

## பெயர்மாற்றம்

**கிருஸ்ணன் ஜெகதீர்வரன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **கிருஸ்ணன் ஜெகதீஸ்வரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் **ஜெகதீஸ்வரன்** என்றே கையொப் பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்

(AKN/766) (11.17)

**- ஜெகதீஸ்வரன் -**

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் கௌரவமான சிறிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**077 052 7090**

# சேவைநலன் பாராட்டு


60ஆவது அகவையில் ஓய்வுபெறும் கோப்பாய் அஞ்சலகத்தின் பொறுப்பு அஞ்சல் அதிபர்

## இரத்தினசாமி தயாபரன்

அவர்கள்

(UPSBIA)

**சேவைக்காலம்**
**10.10.1986 - 22.07.2019**




**33 ஆண்டுகளாக**
அஞ்சல் திணைக்களத்தில்
**17 அஞ்சலகங்களில்**
பணியாற்றிப் பதவி உயர்வுகள் பெற்று
**இறுதியாக கோப்பாய் அஞ்சலகத்தில்**
**பொறுப்பு அஞ்சல் அதிபராகப்**
**பணியாற்றி இன்று (20.07.2019 )**
**சனிக்கிழமை**

சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது அஞ்சல் அதிபரின் மகத்தான அஞ்சல் சேவையினைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலத்தில் குடும்பத்துடன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**அஞ்சலகம் - கோப்பாய்**
**உப அஞ்சல் அலுவலகங்கள் :- கோப்பாய் வடக்கு,**
**நீர்வேலி, சிறுப்பிட்டி, அச்செழு.**

(CS/26769)(11,17)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2019

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பபடிவங்களை மாநகர சபையின் நானாவித இறை வரிப்பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும்.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | : | ரூபா. 500.00 + VAT + NBT |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | : | 20.07.2019 தொடக்கம் 02.08.2019 (அலுவலக நாட்களில் மு.ப. 9.00 – பி.ப 03.00 மணிவரை) |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி | : | 02.08.2019 பி.ப. 12.00 வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | : | 02.08.2019 பிற்பகல் 02.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் | : | 02.08.2019 பிற்பகல் 03.00 மணிக்கு |

- தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - ரூபா. 2,000.00

விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு நானாவித இறைவ ரிப்பகுதியில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 02.08.2019 பிற்பகல் 02.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித்தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.
கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு : -

- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரகடைகளும், உற்சவ காலத்திற்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகளை தனியார் காணிகளிலோ அல்லது பொது இடங்களிலோ சபையின் அனுமதியின்றி திறந்து வியாபாரம் நடத்தவோ, விளம்பரங்கள், விளம்பர பதாகைகள் அமைப்பதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு அனுமதியின்றி நடத்தப்படும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
- கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான அனுமதியை யாழ்ப்பாணம் மாநகரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.
- உணவு கையாளும் நிலை யங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.
- குத்தகைக்கான விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் ஆவணத்தில் அடங்கிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டே விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை மேற்கொள்ளவேண்டும்.
- ஆலய சுற்றாடல் மற்றும் கடைத்தொகுதி ஆகிய இடங்களில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

**இம்மானுவல் ஆனல்ட்**
**மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் தர்மராஜா (ஆசை)



காரைநகர் களபூமி வளுப்போடையைப் பிறப்பிடமாக வும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சோம சுந்தரம் தர்மராஜா (ஆசை) 14.07.2019 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலகா சோமசுந்த ரம் இராசபூபதி தம்பதிகளின் அன்பு மகனும், சண்முகநா தன், செல்வராசா, புஷ்பராணி (காரைநகர்), உமாதேவி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான சற்குணராசா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நாளை (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : சகோதரர்கள்**

சண்முகநாதன் - 0750377408,
செல்வராசா (கலகா) - 0765486463,

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# எதற்காக நற்சான்றிதழ்?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையில் அன்றாட நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குத் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதி கிலெமன்ட் வோவ்லே, அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன இடையிலான சந்திப்பு அயலுறவுத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான இலங்கையின் நகர்வுகளுக்குத் தனது நற்சான்றிதழைக் கொடுத்துள்ளார் கிலெமன்ட் வோவ்லே.

அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருந்தாலும், நாட்டில் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், எதிர்ப்பு நடவடிக்கைகள் என்பன மக்களின் உரிமையைப் பறிக்கவில்லை என்பது மாரப்பனவின் 'வித்துவத்தனமான' விவாதமாக அமைந்துள்ளது. மக்கள் நடத்தும் போராட்டங்கள் மூலம் அவர்களின் 'ஒன்றுகூடும் உரிமை' உள்ளிட்ட உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பது வெளிப்படுகின்றது என்று சொல்லும் மாரப்பன, மக்கள் போராட்டங்களில் ஈடுபடுவதே தமது உரிமைகளை இழந்தமையால்தான் என்பதை அறியாதுள்ளமை வேடிக்கையிலும் வேடிக்கையே.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டனர். நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகால மற்றும் பயங்கரவாதச் சட்டங்கள் அவர்கள் கைது செய்யப்படுவதற்கும், தடுத்து வைக்கப்படுவதற்கும் ஏதுவாக அமைந்தன. இன்று வரையிலும் பலநூறு முஸ்லிம்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவுமில்லை. இவ்வாறிருக்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி கிலெமன்ட் வோவ்லே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான இலங்கையின் போக்கை எவ்வாறு ஏற்றுக்கொள்ளலாம்? எவ்வாறு இலங்கை தொடர்பில் திருப்தி நிலையை வெளிப்படுத்தலாம்?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகம் இலக்குவைக்கப்பட்டு வஞ்சிக்கப்படுகிறது. பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொடஅத்தே ஞானசாரதேரர், நாடளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்னதேரர் உள்ளிட்ட தேரர்களில் இனவாதப்போக்கு இந்த நாட்டின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் வகையில் வலுப்பெற்று வருகிறது. சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்களை உடைக்கின்றனர், நந்திக்கொடிகளை எரிக்கின்றனர், ட்பௌத்த மாநாடுகளை நடத்துகின்றனர், சிங்கள மக்களிடத்தில் மதவாதத் தீயை விதைக்கின்றனர், பௌத்த அரசு நிறுவப்படும் என்று வெளிப்படையாக அறிவித்துள்ளனர். அதில் அவர்கள் உறுதியாகவும் உள்ளனர். இத்தகைய நிலையில் உயிர்த்த ஞாயிறின் பின்னரான இலங்கை அரசின் போக்கு எந்த வகையறாவின் கீழ் பாராட்டப்படக்கூடியதாக உள்ளது.

ஐ.நா.சபை இலங்கை தொடர்பிலான உண்மைநிலையை துல்லியத்தனமாக அறிந்து, இலங்கையைத் தொடர்ந்து கண்காணித்து, அழுத்தம் வழங்கினாலேயே இங்குள்ள சிறுபான்மை மக்களுக்கு ஓரளவாவது மீட்சி கிட்டும். அதைவிடுத்து திருடன் கையிலே சாவியைத் திணிக்கும் செயலைத் தவிர்க்க வேண்டும். அரசிடமே சென்று அரசைப்பற்றியே வினவுவது திருடன் கையிலே சாவியைத் திணிக்கும் செயலேயன்றி வேறொன்றும் இல்லை.



# தமிழர்களை தனி வழி செல்வதற்கு அனுமதிப்பதே இன்றுள்ள தீர்வு

■ இந்துமதி

இந்த நாட்டில் இனவாதத் தீ என்றுமில்லாதவாறு கொளுந்துவிட்டு எரிந்து கொண்டிருப்பதைக் காண முடி கின்றது. சிறுபான்மை இனத்தவர்களைக் கிள்ளுக்கீரையாகக் கூட மதிக்காத மனோபாவம் சிங்கள இனத்தவர்கள் மத்தியில் அதிகரித்துவிட்டது.

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான மோசமான சம்பவங்கள் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டன. இந்த ஆலயம் பரம்பரை பரம்பரையாகத் தமிழர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அந்த ஆலய வளாகத்தினுள் அடாத்தாக நுழைந்த பௌத்த தேரர்கள் சிலர் அங்கு இருந்த பிள்ளையார் ஆலயத்தை இடித்து அழித்துவிட்டு பௌத்த விகாரையை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதைத் தடுக்க முடியாத அவல நிலையில் தமிழர்கள் உள்ளனர். ஏனென்றால் தொல்பொருள் திணைக்களத்தினரும் காவல் துறையினரும் சிங்களவர்களுக்குச் சார்பாக நடந்து கொள்வதுடன் தமிழ் மக்களை அடக்கியொடுக்குவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

கன்னியா வெந்நீர் ஊற்று வளாகத்தினுள் தமிழர்கள் உட்புகுவதற்குத் தடை விதித்த பொலிஸார் சிங்களவர்களுக்கு அனுமதி வழங்கியமை மனித உரிமைகளை மீறுகின்ற செயலாகும். ஆனால் அரசு இதைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. அரச தலைவரும் சகலதையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

### இனவாதத்தை விதைக்கும் ஞானசாரதேரர்

அரச தலைவரின் கருணையால் வெளியில் சுதந்திரமாக நடமாடித் திரியும் ஞானசாரதேரரின் அட்டகாசம் எல்லைமீறிச் சென்று கொண்டிருக்கின்றது. ஒரு பௌத்ததேரர் என்ற வகையிலும் கூட நீதி, நியாயங்கள் தொடர்பாக அவர் சிந்திப்பதாகத் தெரியவில்லை. கருணையையும் அகிம்சையையும் போதிக்க வேண்டிய அவர் இனவாதத்தையும் வன்சொற்களையும் விதைத்துக் கொண்டிருக்கிறார். இலங்கை ஒரு சிங்கள - பௌத்த நாடு என்பதை தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என அவர் போதிக்கின்றார். மேலும் கன்னியா விவகாரத்தில் முடிவுகளை மேற்கொள்கின்ற உரிமை சிங்கள பௌத்தர்களுக்கே உள்ளது என்றும் அவர் வாயில் வந்தவாறு பிதற்றுகின்றார். இத்தகையவர்கள் காவியுடை அணிந்து துறவிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தமக்கு வழிகாட்டிய புத்தபெருமானுக்கே ஞானசாரதேரர் போன்றவர்கள் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றனர்.

### பிக்குகளின் மதவெறி வன்செயல்கள்

முல்லைத்தீவு மாவட்டம் நீராவிப்பிட்டி ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்த நந்திக் கொடியை பிக்கு ஒருவர் அறுத்தெறிந்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. அந்த ஆலய வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்த அந்த பிக்கு இந்த அடாத செயலைப் புரிந்ததை என்னவென்று சொல்வது என்றே புரியவில்லை. அது மட்டுமல்லாது மலையத்தில் அமைந்துள்ள கந்தப்பளை மாடசாமி ஆலயத்தில் பொலன்னறுவையிலிருந்து சென்ற பிக்கு ஒருவர் பௌத்த கொடியை ஏற்றி அழகு பார்த்துள்ளார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போதும் பௌத்த பிக்குகள் மீது எதிர்மறையான அபிப்பிராயமே மனதில் எழுகின்றது. மதம் என்பது இறைவனை வணங்குவதற்கான ஒரு கருவியாகவே பயன்படுத்தப்பட வேண்டும். அதைவிடுத்து வன்செயல்களைத் தூண்டு வதற்கும் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மதத்தைப் பயன்படுத்தவதை எந்த கையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

### காவியுடை தரித்தோரே அதிகாரம் மிக்கவர்கள்

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் காவியுடை தரித்தவர்களுக்கு அளவுக்கும் அதிகமான சலுகைகள் வழங்கப்படுவதுடன் ஆட்சியில் இருப்பவர்கள் அவர்களுக்கு அஞ்சி நடக்கின்ற அவல நிலையும் காணப்படுகின்றது. இதுவே இனவாதமும் மதவாதமும் இந்த நாட்டில் தலைதூக்குவதற்கான முதன்மைக் காரணமாகும்; சிங்கள அரசியல்வாதிகளாகட்டும் அல்லது காவியுடை தரித்தவர்களாகட்டும் வார்த்தைக்கு வார்த்தை இந்த நாடு சிங்கள - பௌத்தர்களுக்கே உரியதெனக் கூறி வருகின்றனர். ஏனைய இனத்தவர்கள் விரும்பினால் இந்த நாட்டில் வாழலாம். அல்லது நாட்டை விட்டு வெளியேறலாம் என்பதே இவர்களின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது.

அந்நியரின் வருகைக்கு முன்னர் இந்த நாடு முழுவதும் ஒருபோதுமே சிங்களவர்களுக்குச் சொந்தமானதாக இருந்ததில்லை. தமிழர்கள் தமக்கெனத் தனியான பிரதேசத்தையும் அரசுகளையும் கொண்டிருந்தனர். தம்மைத் தாமே ஆண்டு வந்தனர். அந்நியர் தமது நிர்வாக வசதிக்காக நாட்டை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தனர். இதுவே தமிழர்கள் தமது சுயாட்சியை இழப்பதற்குக் காரணமாகிவிட்டது. இதைப் போக்கும் முகமாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள். அதுவும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு அடக்கப்பட்டுவிட்டது. தற்போது இந்த நாட்டில் தமிழர்களுக்கு எந்த விதமான உரிமையும் இல்லையென இனவாதிகளும் காவியுடை தரித்தவர்களுக்கும் கூறுகின்றனர்.

### வரலாற்றுப் பாரம்பரிய இடங்களை மீட்கவே போராடும் தமிழர்கள்

தமிழர்கள் முழு நாட்டின் மீது உரிமை கோரி நிற்கவில்லை. தமது பாரம்பரியமான பிரதேசங்களில் சுதந்திரமான சுயாட்சியையே கோரி நிற்கின்றனர். இந்தியாவிலிருந்து முஸ்லிம் மக்களுக்கென பாகிஸ்தான் அமைந்ததைப் போன்று தமிழர்களுக்கும் சுயாட்சி மிக்க ஆட்சியொன்று அமைந்துவிட்டால் இனப்பிரச்சினை என்பதே இந்த நாட்டில் இருக்கமாட்டாது. ஆகவே தமிழர்களை மேன்மேலும் வதைப்பதை விடுத்து அவர்களைச் சுதந்திரமாக வாழ விடுவதே அனைவருக்கும் நல்லது.

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன் செய்திகள்

09

சனிக்கிழமை 20 ஜூலை 2019

# வேலணைப் பிரதேசத்தில் தண்ணீருக்கு தட்டுப்பாடு

## பிரதேச சபை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டு

*யாழ்ப்பாணம், ஜூலை 20*

**வே**லணை பிரதேச சபையில் குடி தண்ணீர் தொடர்பான பிரச்சினை சபை ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை தொடர்கிறது இவ்வாறு சபை அமர்வில் உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப் பட்டது.

வேலணை பிரதேச சபை மாதாந்த அமர்வு தவிசாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் குடிதண்ணீர் தொடர்பான பிரச்சினை நீண்ட நேரமாக விவாதிக்கப்பட்டது.

இதன்போது உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதாவது:

வேலணை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கான குடிதண்ணீரை சபையே வழங்கும். நன்னீர் குடி தண்ணீர் கிணறுகள் உவர் நீராக மாறி வருவதால் தனியார் தாங்கிகள் மூலம் தண்ணீரை விநியோகிப்பது மட்டுப்படுத்தப்படவேண்டும். சபையே மக்களுக்கு குடி தண்ணீரை விநியோகிக்கும். இவ்வாறு மாதாந்த சபை அமர்வில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. இவ்வாறான நிலையில் சபைக்கு உட்பட் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் போதுமானதாக இல்லை.

சில இடங்களுக்கு சபையால் தாங்கிகள் மூலம் வழங்கப்படும் குடி தண்ணீர் வழங்கப்படாத நாள்களும் உண்டு. அந்த நாள்களில் இந்த மக்களின் நிலை என்ன? சபை தான் எடுத்து கொண்ட பொறுப்பை சரிவரச் செய்ய வேண்டும். தண்ணீர் ஏன் விநியோகிக்க படவில்லை என்று மக்கள் கேட்டால். வாகனம் பழுது என்று பதில் கூறப்படும். இந்த நிலை தான் இப்போது காணப்படுகிறது. இதற்கு ஒரு முடிவு வேண்டும். சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து குடிதண்ணீர் விநியோகத்தை பற்றி கதைத்து இன்றும் அந்தக் கதை நீடித்து செல்கிறது இதற்கு சரியான தீர்வை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சபையின் உறுப்பினர்கள் 19 பேரும் இது தொடர்பான தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

**வளங்கள் சுரண்டல்**

சபைக்கு சொந்தமான பகுதிகளில் உள்ள வளங்கள் சட்ட விரோத முறையில் இங்கிருந்து கொண்டு செல்லப்படுகிறன. மரங்கள், இரும்புகள், கால்நடைகள் ,கற்றாழை ஆகியன இங்கிருந்து கொண்டு செல்லப்படுகின்றன. சபை வளங்கள் சுரண்டப்படுவதை நிறுத்த வேண்டும். இது தொடர்பான தீர்மானம் சபையில் நிறைவேற்றப் பட்ட பின்னரும் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் நடைபெறுகிறன.

பனை மரங்கள் பூவரசு ,வேம்பு உட்பட எல்லா மரங்களும் இங்கிருந்து கொண்டு செல்லப்படுகின்றன. இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் மூன்று மொழிகளிலும் அறிவித்தல் பலகை போட வேண்டும். அனுமதியின்றி வளங்கள் கொண்டு செல்ல தடை என்று இங்கு வருபவர்களுக்கு முதலில் தெரிய வேண்டும் என்று தெரிவித்தனர்.

**சபையை நடத்த ஒத்துழைப்பு வழுங்குங்கள்**

சபைக்கு என்று ஒழுங்கு முறை உண்டு அதன் படி அதனை நடத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு வேண்டும். இவ்வாறு ஆளுங் கட்சி உறுப்பினர் தி.கேமதாஸ் தெரிவித்தார். மாதாந்த சபை அமர்வில் என்னென்ன விடயங்கள் நடைபெறும் என்று நிகழ்ச்சி நிரல் வழங்கப்படும். ஆனால் அந்த ஒழுங்கில் சபை அமர்வு நடைபெறுவதில்லை. ஒருவர் தமது கருத்தை முன்வைக்கும் போது அதனை எதிர்த்து மற்ற உறுப்பினர்கள் கதைக்கிறார்கள். தேவையற்ற தனிப்பட்ட விடயங்களை சொல்லி விவாதம் செய்கிறார்கள். இங்கு சபை சபை மாதிரி நடைபெறவில்லை. அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே சபையை நடத்திச் செல்ல முடியும்- என்றார்.

**சபையின் ஆளுகைக்கு உட்பட்ட விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.**

சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட வேலைகளை முன்னுரிமை படுத்தி செயற்பட வேண்டும். ஆனால் அந்த விடயங்களில் அக்கறையின்மை காணப்படுகிறது. பொது அமைப்புகளை மீளமைத்தல் ,குடிதண்ணீர் ,சபையின் கட்டட அனுமதி, விளம்பர அனுமதி போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் சபை நேரடியாக தலையிட்டு சிறப்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். ஆனால் அதில் அக்கறையின்மை காரணமாக சபைக்கு மரியாதை கொடுக்காமல். சபையின் அனுமதியின்றி பல்வேறு செயற்பாடுகளைப் பலர் முன்னெடுத்துச் செல்கின்றனர். இவை யாவும் சீர் செய்யப்பட வேண்டும் என்றும் சபையின் உறுப்பினர்கள் 19 பேரும் தமது கருத்துக்களை இவ்வாறு முன்வைத்த னர். (ஐ-7)

## தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் இளைஞர் மருத்துவமனையில் சேர்ப்பு

### மானிப்பாய் போக்குவரத்து பொலிஸ் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 20

தாக்குதலுக்கு இலக்கான நிலையில் இளைஞர் ஒருவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் நேற்றுமுன் தினம் இரவு சேர்க்கப்பட்டுள்ளார். வீதியில் நின்ற போது அங்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார் தன் மீது தாக்குதல் நடத்தினர் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். வ.நிரோஜன் என்ற 24 வயது இளைஞரே பாதிக்கப்பட்டுள்ளார்.

மேசன் வேலைக்குச் சென்று விட்டு நேற்றுமுன் தினம் மாலை மானிப்பாய் சந்தியில் வீதியோரம் நின்றவாறு கைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த போது அங்கு. 3 உந்துருளிகளில் 4 போக்குவரத்துப் பொலிஸார் வந்தனர். அவர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள். அருகில் வந்த ஒருவர் திடீரெனத் தாக்கினார். ஏன் எனக் கேட்டபோது, ஏன் நெஞ்சை நிமிர்த்திக் காட்டுகின்றாய்? என்று கேட்டு மீண்டும் தாக்கினார். திருப்பவும் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டேன். அடையாள அட்டை இருக்கிறதா? என்று கேட்டனர். வீட்டில் இருக்கிறது என்று கூற ஏனைய பொலிஸாரும் இணைந்து சரமாரியாகத் தாக்கி விட்டு அங்கிருந்து சென்றனர். அந்தப் பகுதியில் இருந்த மக்களும் அதைப் பார்த்தனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையம் சென்று தாக்கப்பட்டமைக்குக் காரணத்தைக் கேட்டபோது.. போக்குவரத்துப் பொலிஸார் அங்கு வைத்தும் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர். அடையாள அட்டை இல்லாததால் தாக்கினோம் என்று கூறினார்கள் என்று பாதிக்கப்பட்ட இளைஞர் தெரிவித்துள்ளார்.

தான் ஏற்கனவே விபத்தொன்றால் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் தாக்கியதால் மேலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளேன் என்றும் அந்த இளைஞர் தெரிவித்துள்ளார். இளைஞர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் மானிப்பாய் பொலிஸார் தன்னை வந்து சந்தித்தனர் என்றும், தன்னைச் சமாதானப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனர் என்றும் அந்த இளைஞர் தெரிவித்தார். (எ-26,105)

## பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு தபால் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 20

மத்திய தபால் பரிமாற்றக ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்துள்ளதுடன், தேங்கியுள்ள தபால்களை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

தபால் தொடருந்துகளில் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படவிருந்த தபால்களை அனுப்ப முடிந்ததாக அவர் கூறியுள்ளார்.

பல கோரிக்கைகளை முன்வைத்து மத்திய தபால் பரிமாற்றகத்தின் ஊழியர்கள் முன்னெடுத்த 48 மணித்தியால பணிப் புறக்கணிப்பு நேற்றுமுன்தினம் மாலை 4 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

கோரிக்கைகளுக்கான தீர்வு வழங்கப்படாத பின்புலத்தில் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## மட்டக்களப்புப் பல்கலைக்கு தீவிரவாத அமைப்பு நிதியுதவி

### நீதிமன்றில் தெரிவித்தது எவ்.சி.ஐ.டி.

கொழும்பு, ஜூலை 20

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு சொந்தமான பல்கலைக்கழகத்துக்கு பயங்கரவாத அமைப்பால் பெருமளவு நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு பல்கலைக்கழத்துக்கு சவுதி அரேபிய அரசால் தடை செய்யப் பட்ட அமைப்பொன்றின் மூலம் ஆயிரத்து 757 கோடி ரூபா வரையில் பணம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக நிதி குற்ற விசாரணைப் பிரிவு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.

அந்தப் பணம் இலங்கை அரச வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

சவுதியில் தடை செய்யப்பட்ட அமைப்பால் வழங்கப்பட்ட பணம், பல்கலைக்கழக நிர்மாணிப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதா அல்லது பயங்கரவாத செயற்பாட்டுக்கு பயன்படுத்தப் பட்டதா என்பது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் வழங்கிய முறைப்பாட்டிற்கமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

NEWUTHAYAN.COM

## தமிழ் மொழியை கற்காதது பெரும் குறைபாடுதான்

### இப்போது வருதப்படுகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 20

தமிழ் மொழியை கற்றுக்கொள்ளாதது தனது பெரும் குறைபாடு என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வெவ்வேறு மொழிகளைப் பேசும் திறமை முக்கிய மானது எனத் தெரிவித்த அவர், இவ்வாறு பேச முடியாமல் போவதால் போர் சூழ்நிலைக்கும் வழிவகுப்பதாக் குறிப்பிட்டார். கல்விப் பொதுத்தரா தர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழிக் கல்வியில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டி தலைமை அமைச்சர் தலைமையில் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மொழிப் பிரச்சினையால் புரிந்துணர்வு இல்லாமற் போகும் போது அது முரண்பாட்டுக்கு வழிவகுக்கும் என சுட்டிக்காட்டியுள்ள தலைமை அமைச்சர், அந்தக் காலத்தில் தாங்கள் தமிழ் மொழியை கற்றுக் கொள்ளவில்லை எனவும், அது தனது குறைபாடு என்றும் குறிப்பிட்டார்.

எனினும் அப்போது ஆங்கில மொழியை கற்றுக் கொண்டதாக தெரிவித்த அவர், தமது ஊர்ப் பகுதிகளில் பெரும்பாலான மக்கள் ஒரு மொழியை மாத்திரமே கற்றுக் கொண்டதாகவும், பேசியதாகவும் தெரிவித்ததுடன், இப்போது ஏனைய மொழிகளின் அவசியத்தையும் உணர்வதாக தெரிவித்தார். (ஒ.5)

### சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்பில்

# தமிழர் பிரதிநிதிகளின் மௌனம் மக்களை சந்தேகிக்க வைக்கின்றது

## *தமிழர் மரபுரிமைப் பேரவை கண்டனம்*

*யாழ்ப்பாணம், ஜூலை 20*

*தமிழர் தாயகப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்பில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் மௌனம் மக்களைச் சந்தேகிக்க வைக்கின்றது. தமிழர் பிரதிநிதிகளும் இதில் பங்காளிகளா? என்று தமிழர் மரபுரிமைப் பேரவை கேள்வி எழுப்பியுள்ளது.*

கன்னியாவில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்கள பௌத்த தேசியம் தன்னை ஒரு பூர்வீக தூய்மையான கலப்பற்ற இனமாக சித்தரிக்க முற்படுகின்றது. இந்த அரசியல் நிகழ்ச்சி ஏனைய இனங்களின் பூர்வீகத்தையும் அதன் வரலாற்றையும் கேள்விக்குட்படுத்தி மாற்றியமைக்க முற்படுகின்றது. ஓர் இனத்தின் வரலாற்றுச் சான்றுகளையும் அதன் பூர்வீகத்தையும் அழித்தல் என்பது அந்த இனத்தின் இருப்பை அழித்தலாகும். கன்னியாவின் பூர்வீகம் தமிழினஇருப்பின் பூர்வீகம்.

பிள்ளையார் கோவிலில் வழிபாடு செய்யச் சென்ற சமயக் குருக்களையும் பக்தர்களையும் பொலிஸார் தடை செய்தது என்பது ஒரு சமயத்துக்குரிய வழிபடுகின்ற உரிமையை மறுத்தலாகும். நீதிமன்ற தடையுத்தரவு கண்காணிக்கப்பட்டு அந்த முயற்சி தடை செய்யப்பட்டபோது மக்கள் தங்கள் எதிர்ப்பை மிக அமைதியான முறையில் காட்ட முற்பட்ட போது இராணுவத்தினர் சிறப்பு அதிரடிப்படையினர், கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு மக்கள் தங்கள் அதிருப்தியை வெளிக்காட்டுவதற்கான முயச்சி முற்றாகவே முடக்கப்பட்டது.

ஒரு சமய மதத் தலைவரை அங்கிருந்தவர்கள் அநாகரிகமாக பேசினார்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. இதே அவமதிப்பு பௌத்த பிக்குக்கு நடந்திருந்தால், அது அரசியல் மயமாக்கப்பட்டு வன்முறைச் சூழல் உருவாக்கப்பட்டிருக்கும். ஆனால் தமிழர்கள் அகிம்சைவாதிகள் வன்முறையை விரும்புபவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கின்றார்கள். அதிகார ஆயுத அரசியல் பலத்தோடு பெரும்பான்மையினர் தாங்கள் விரும்பியதை ஏனையவர்களின் உரிமையை பறிப்பதாகக் கூட இருக்கலாம், செய்யலாம் என்ற தோற்றப்பாடு வரலாற்றில் நடந்தேறியுள்ளது. மீண்டும் அது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மத வழிபாடு செய்வது நாட்டின் இன நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பது அப்பட்டமான பொய். அவ்வாறெனில் வடக்கு-கிழக்கில் பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றில் காளான்களாக முளைத்த பௌத்த விகாரைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் மீண்டும் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு அது சிங்கள -பௌத்தர்களுக்குரியது என்பதை சுட்டிநிற்கின்றது. அவ்வாறெனில் இலங்கையின் பல்லினத்தன்மைக்கான வெளி மறைக்கப்பட்டு விட்டதா பெரும்பான்மை சனநாயக வெளியில் ஒற்றையாட்சித் தன்மையில் ஏனைய இனக் குழுமங்கள் நாளடைவில் இன அழிப்பை சந்திக்கும் என்பதற்கு வரலாற்றில் நிறைய உதாரணங்கள் உண்டு. அவ்வாறான பாதையை இலங்கை அரசு தெரிந்தெடுத்திருப்பது என்பது இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நிருபணமாகின்றது. மேற்குலக நாடுகளுக்கும் ஐ.நாவுக்கும் தன்னை ஒரு சனநாயக நாடு, நல்லிணக்க சமாதான விரும்பி என்று காட்டிக்கொண்டு அதன் இன்னொரு கோர முகத்தை பெரும்பான்மை தவிர்ந்த இனத்தவர் மேல் காட்டுவது என்பது உண்மையில் இலங்கை அரசின் அரசியல் விருப்பில் ஐயம் கொள்ளச் செய்கின்றது.

அண்மைய காலங்களில் இலங்கையில் சனநாயகத்தை சிதைக்கின்ற பௌத்த பிக்குகளின் முயற்சிகளும் அவர்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள், தண்டனை விலக்கீட்டு நிலையில் நாடு இறைமை ஆட்சி நோக்கிப் பயணிக்கின்றதா? என்று சந்தேகம் கொள்ளச் செய்கின்றது - என்றுள்ளது. (ஒ.5)




## மாணவர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 20

மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

2018 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் நிலைச்சித்தி பெற்ற மாணவர்களும், மேலும் வேறு பலதுறைகளில் மிளிர்ந்த மாணவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.


யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ நிறுவனத்தால் இந்த மதிப்பளிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர். மு.கந்தசாமி, யாழ்ப்பாண மாவட்ட உதவிச் செயலர் முரளிதரன்,வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆயவன், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர் திருமதி.ஏ.சண்முகரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)




யாழ்ப்பாணம் சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையில் விசு. க. விமலனின் நினைவேந்தலும் ,பரிசளிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன. (ஐ)

# நிலவில் மனிதன் கால் பதித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவு



நில்வில் முதன்முதல் கால் பதித்த நீல் ஆம்ஸ்ரோங்கின் தடம்


நிலவுக்கு மனிதன் சென்று கால்பதித்து இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி அமெரிக்கா தனது மூன்று விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்பியது. ஜூலை மாதம் 20ஆம் திகதி அவர்களைச் சுமந்து சென்ற விண்கலம் நிலவில் தரையிறங்கியது.

நீல்ஆம்ஸ்ரோங் நிலவில் முதன்முதல் கால் பதித்தார்.


இந்த இமாலயச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. மனித வரலாற்றின் மாபெரும் மைல்கல்லாக அமைந்த இந்தச் சம்பவம் தொடர்பாக தற்போதும் பல்வேறுபட்ட வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. நிலவுக்கு மனிதன் சென்ற அரைநூற்றாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளுக்கு அமெரிக்காவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)











நிலவில் முதன்முதல் வைக்கப்பட்ட மனிதத் தடம்

## திறந்தவெளி அரங்கம் திறப்பு

வடமராட்சி,ஜூலை 20
யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி அரங்கம் இன்று மதியம் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
பாடசாலையின் அதிபர் த.செல்வக்குமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு அரங்கத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.
கிராமிய எழுச்சித்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் இந்த திறந்த வெளி அரங்கம் அமைக்கப்பட்டது. (ஐ-70)

# வவுனியாவில் கடும் வறட்சி 120 ஏக்கர் நெற்செய்கை அழிவு

## மாவட்டச் செயலர் தெரிவிக்கிறார்

வவுனியா, ஜூலை 20

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக 89 குடும்பங்களின் 120 ஏக்கர் நெற்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது. 49 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்று மாவட்டச் செயலர் ஐ.எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நிலவும் வறட்சிப் பாதிப்புத் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
வறட்சிக் காலநிலை நீடிக்குமாயின் ஏனைய பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்படும் நிலமை காணப்படுகிறது. ஓமந்தை, பம்பைமடு, கோவில்குளம் போன்ற கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட நெற்செய்கை நிலங்களே அழிவடைந்துள்ளன.
இராசேந்திர குளத்தின் கீழான 60 ஏக்கர் நெற் செய்கை அழிவடைவதைத் தடுக்கும் நோக்கில் இடர் முகாமைத்துவ நிலையம் ஊடாகவும், மத்திய நீர்பாசனத் திணைக்களம் ஊடாகவும் நீர்ப் பம்பிகள் மூலமாகவும் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.
இதுதவிர, வவுனியா வடக்கு ஊஞ்சல் கட்டி, மருதோடை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துடன் இணைந்து குடிதண்ணீர் வழங்குகின்றது என்று தெரிவித்தார். நாட்டில் வடக்கு உட்பட சில மாகாணங்கள் வறட்சியால் பாதிப்புக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதேநேரம் நாட்டின் ஏனைய சில பகுதிகளில் மழை பெய்துவருகின்றது. (த)

## பல அபிவிருத்தி திட்டங்கள் வடமராட்சியில் ஆரம்பிப்பு

வடமராட்சி,ஜூலை 20
வடமராட்சி பிரதேசத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொள்கிறார்.
அன்றைய தினம் முற்பகல் 9 மணிக்கு கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திலும், பிற்பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேசசெயலகத்திலும் நடைபெறும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார்.
பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபையின் அல்வாய் மற்றும் பொலிகண்டி வட்டாரத்தில் வீதிகள், குளங்கள், ஆலய சீர்மைப்பு உள்ளிட்ட 6 வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
இந்த 6 வேலைதிட்டங்களுக்குமாக சுமார் 20 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை கிராம எழுச்சித்திட்டத்தினுடாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஒதுக்கீடு செய்துள்ளார்.
இதனையடுத்து மாலை 4.30 மணிக்கு கரவெட்டி திரு இருதயக்கல்லூரி கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் ரூபாவில் அமைக்கப்பட்ட மலசலக்கூடம் மற்றும் விளையாட்டு மைதான திறந்த வெளி அரங்கம் ஆகியவற்றை திறந்துவைக்கவுள்ளார். (ஐ-173)

# அட்டைத்தொழில் முறைமையால் முல்லை மீனவர்கள் கடும் பாதிப்பு

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜூலை 20
முல்லைத்தீவு சாலைப்பகுதியில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அட்டைத்தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கையால் புதுக்குடியிருப்பு மாத்தளன் பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவிப்பதாகவும்.
இது பற்றி அவர்கள் தனக்கு முறையிட்டுள்ளனர் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார் புதுக்குடியிருப்புப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.
பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் முக்கியமாக எடுக்கப்பட்ட விடயம் அட்டைத்தொழில் சம்மந்தமானது. இது இந்தப் பகுதிக்கு உட்படாதவிடத்தும் இந்த மக்களுடன் சேர்ந்த விடயம்.
அட்டைத்தொழில் எங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை உருக்குலைத்து வருகின்றது. ஒளியூட்டி ஆழ்கடலில் அட்டைத்தொழில்செய்துவருவதால் மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டு வருகின்றது.
விடுதலைப்புலிகள் காலத்தில் எந்தக் கடல் உணவுகளுக்கும் தட்டுப்பாடு இல்லை. இன்று கடல் உணவுகள் மக்களுக்கு கிடைக்கவில்லை.
அட்டைத்தொழில் நாடாளுமன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிலாக இருந்தாலும் அதை இங்குவந்து செய்பவர்கள் அந்த நடைமுறையைக் கடைப்பிடிக்காமல் செயற்படுகின்றார்கள். இதுதான் இங்குள்ள பிரச்சினை. இதனால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுமுக்கியபிரச்சினையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ரி3)



## தகவல் அறியும் சட்டங்கள் தொடர்பான கருத்தமர்வு

சாவகச்சேரி, ஜூலை 20
தகவல் அறியும் சட்டங்கள் தொடர்பான அறிவுறுத்தல் கருத்தமர்வு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.
தகவல் அறியும் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வடபகுதியில் உள்ள பிரதேச செயலகங்களில் தகவல் அறியும் சட்டங்கள் தொடர்பான அறிவுறுத்தல் கருத்தமர்வுகளை ஆணைக்குழுவின் அலுவலர்கள் நடத்தி வருகின்றனர்.
இக் கருத்தமர்வுகளில் பிரதேச செயலக அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர். (ஐ-9)



## தேசிய விருது வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 20
கமநல அபிவிருத்தித் திறன்களில் சிறப்புத் திறமையுடையவர்களுக்கு தேசிய விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் செல்வமகால் மண்டபத்தில் நடைபெற்றது.
மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிஆணையாளர் நிஷாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.
கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கமநலத்தின் பெருமை 2018 என்னும் தலைப்பில் இந்த விருது வழங்கப்பட்டது.
இதில் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்திலிருந்து பங்குபற்றிய மூவர் தேசிய விருதினைப் பெற்றுள்ளனர்.
சிறந்தவிதைநெற்பண்ணையாளர்களுக்கான தெரிவில் முதலாம் இடத்தை மீசாலை கிழக்கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை நிர்மல மூர்த்தி யும், இரண்டாமிடத்தைமட்டுவில் வடக்கைச் சேர்ந்த க.பேரின்பநாதனும் பெற்றுக் கொண்டனர்.
சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளர் தெரிவில் முதலிடத்தையும் சிறந்த உழவன் தெரிவில் இரண்டாமிடத்தையும் மந்துவில் மேற்கைச் சேர்ந்த இ.நாகராசா பெற்றுக் கொண்டார்.
மாவட்டத்தில் உள்ள 15 கமநல சேவைகள் நிலையப் பிரிவுகளுக்கிடையில் மாவட்ட நிலையில் நட்த்தப்பட்ட போட்டியில் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தைச் சேர்ந்த மூவர் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. (ஐ-9)

## முல்லை. விசுவமடுப்பகுதியில் 4 ஆடுகளை வெட்டிக் கொன்று வீடும் எரிப்பு: குடும்பத் தலைவர் கைது

முல்லைத்தீவு, ஜூலை 20
முல்லைத்தீவு விசுவமடு மேற்குப் பகுதியில் தனது வீட்டில் நின்ற நான்கு வாழ்வாதார ஆடுகளை கொன்றுவிட்டு தனது வீட்டுக்குத் தீ வைத்து எரித்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று புதுக்குடி யிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் நடைபெற்றுள்ளது.
வீட்டில் எவரும் இல்லாத நிலையில் அவர் இவற்றைச் செய்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் வீட்டில் இருந்த உடமைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன. நான்கு ஆடுகளும் உயிரிழந்துள்ளன.
வீடு எரிவதை அவதானித்த அயலவர்கள் அதை அணைக்க முற்பட்டார்கள் எனினும் அது சாத்தியமாகவில்லை. முழுதும் எரிந்து விட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் குறித்து கிராம அலுவலருக்கும் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் பார்வையிட்டனர். அதன்பின்னர் குடும்பத் தலைவரைக் கைது செய்தோம். விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ரி3)





# மிகுதிப் பணத்துக்குப் பதிலாக ரொபி வழங்கியதால் தர்க்கம்

## நுகர்வோர் அதிகார சபையின் கவனத்தை ஈர்க்கிறார் பாதிக்கப்பட்டவர்

வவுனியா, ஜூலை 20

மிகுதிப் பணத்துக்குப் பதிலாக ரொபியைக் கொடுத்ததால் ஏற்பட்ட தர்க்கம் தகாத வார்த்தைப் பிரயோகங்களுக்கு இடமளித்துள்ளதாகவும் அதனால் தான் மன உழைச்சலுக்கு ஆளாகியுள்ளேன் என்றும் நுகர்வோர் ஒருவர் குற்றஞ்சாட்டுகிறார்.

இந்தச் சம்பவம் வவுனியாவில் சில நாள்களுக்கு முன்னர் நடந்துள்ளது. வவுனியா பழைய பேருந்து நிலையத்தை அண்மித்துள்ள ஓர் உணவகத்தில் உணவருந்திய ஒருவருக்கு மிகுதிப் பணமாக 5 ரூபா கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக உணவக உரிமையாளர் ரொபி ஒன்றைக் கொடுத்துள்ளார் என்றும் அது 2 ரூபா பெறுமதியானது என்றும் பாதிக்கப்பட்டதாகக் கூறும் நுகர்வோர் ஒருவர் குற்றஞ்சாட்டுகிறார்.

ரொபியைஏற்கமறுத்துமீதிப்பணத்தை வழங்குமாறு கோரியபோது ஏற்பட்ட தர்க்கத்தால் கடை நடத்துநர் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தார் என்றும் அந்த நுகர்வோர் குற்றஞ்சாட்டினார். இதனால் மன உழைச்சலுக்கு உள்ளாகியுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

சில்லறை வழங்காது 'ரொபி வழங்கும் வர்த்தக நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுக்கிறார். (த)

## மடைப்பள்ளிக்கு அடிக்கல் நடுகை

வவுனியா, ஜூலை 20

வவுனியா ஈஸ்வரிபுரம் சிறிநாகபூசணி அம்மன் ஆலய மடைப்பள்ளிக்கு சம்பிரதாயபூர்வ அடிக்கல்லை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியின் அகில இலங்கைத் துணைத் தலைவரும், வவுனியா மாவட்டத் தலைவருமான பாலச்சந்திரன் சிந்துஜன் நட்டார்.

கிராம அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர், கலாசாரப் பகுதியினர், ஆலய பரிபாலன சபையினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் சங்கத்தினர், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்காந்தராஜாவின் கிரரம எழுச்சி நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்படி மடைப்பள்ளி அமைத்தலுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. முதலாம் கட்டத்தில் 0.15 மில்லியனும் இரண்டாம் கட்டத்தில் 0.2 மில்லியனுமாக மொத்தம் 0.17மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், தமிழ் அரசுக் கட்சியின் அகில இலங்கை துணைப் பொதுச்செயலரும், வவுனியா மாவட்டத் தலைவருமான மருத்துவர் ப.சத்தியலிங்கத்தின் பரிந்துரையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் மண்கும்பான் பள்ளிவாசல் பகுதியில் வாழும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஹாஜியார் பௌன்டேஷன் அமைப்பினரால் இந்த உதவிகள் பள்ளிவாசல் மண்டபத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் வை.எம்.எம்.ஏ.நிறுவுநர்திருமதி எம்.எஸ்.ரஹீம் இந்த உதவிகளை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணி உறுப்பினர்கள், மண்கும்பான் பள்ளிவாசல் மௌலவி மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## கூட்டுறவு தின நிகழ்வு

பன்னாட்டு கூட்டுறவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு தின நிகழ்வு இன்று முற்பகல் 9 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலய வளாகத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் இ.அ. ஆனந்தராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் செல்வி பரின் ஹஸானா அப்துல் சம்யு, தென்மராட்சி பிரதேச உதவிப் பிரதேச செயலர் திருமதி வி.கௌசிகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் கூட்டுறவாளர் மதிப்பளிப்பு, சங்கத்தின் வறுமையுள் திறமை நிதிய மாணவர் மதிப்பளிப்பு, பணியாளர் மதிப்பளிப்பு, கூட்டுறவு அரவணைப்பு நிதி பெறுவோருக்கான கொடுப்பனவு வழங்கல் போன்றவை இடம்பெறவுள்ளன. (ஐ-9)

## 6 கிலோ கஞ்சா மீட்பு: ஒருவர் கைதாகினார் மற்றையவர் ஓட்டம்



வலிகாமம் இளவாலை விளான் பகுதியில் 6 கிலோக்கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. அதனை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொருவர் தப்பியோடிவிட்டார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

போதைத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து உந்துருளியில் சென்றவர்களை மறித்த பொழுது ஒருவர் தப்பியோடினார். மற்றையவர் கைது செய்யப்பட்டார். அவரிடமே கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆவரங்காலைச் சேர்ந்த 24வயதுடையவரே கைது செய்யப்பட்டார். அவர் சட்ட நடவடிக்கைக்காக இளவாலைப் பொலிஸில் ஒப்படைக்கப் பட்டுள்ளார் என்று மேலும் தெரிவித்தனர். (த-26)

## மதுபோதையில் சாரத்தியம்; சாரதிகளுக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 20

மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.,

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுத் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இதன்போது சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)



## கசிப்பு வைத்திருந்த சந்தேகநபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜூலை 20

கசிப்பை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

4 ஆயிரத்து 200 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சாவகச்சேரி கெருடாவில் வாசிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேகநபரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ9)

## பொன்விழாவும் கட்டடத் திறப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் அம்பாள் சனசமூ நிலைய மற்றும் அம்பாள் விளையாட்டுக் கழக பொன்விழாவும் கட்டடத் திறப்பு நிகழ்வும் நிலைய முன்றலில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

அம்பாள் சனசமூ நிலையத் தலைவர் ச.சந்திரமோகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மதிப்புறு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், அம்பாள் சனசமூக நிலைய நிறுவுநர் இ.தங்கராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது பொன் விழா மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ஐ-23)

## ஆக்கப்பொருள் கண்காட்சி

சாவகச்சேரி, ஜூலை 20

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு ஆக்கப்பொருள் கண்காட்சி நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நிலைய மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. முன்பள்ளிச் சிறார்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களே கண்காட்சியில் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஹற்றன் நாஷனல் வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் திருமதி அகல்யா பாபுஜி கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-9)





# விபுலானந்தரின் நினைவுதினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

சுவாமி விபுலானந்தரின் 72 ஆவது நினைவு தினம் வவுனியாவில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வவுனியா இரண்டாம் குறுக்குத்தெரு சந்தியில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரின் நினைவுச்சிலை அருகே இடம்பெற்றது.

வவுனியா நகரசபையினரின் ஏற்பாட்டில் உபநகர சபைத் தவிசாளர் சு.குமாரசுவாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை நினைவுப்பேருரையை தமிழ் மணி அகளங்கன் நிகழ்த்தினார். நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான எஸ்.சந்திரகுலசிங்கம், சுமந்திரன், சேனாதிராஜா , பாலபிரசன்னா, கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ் மணி "அகளங்கன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)


## அதிபர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு

பளை, ஜூலை 20

யாழ்ப்பாணம் பளைக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பளைக் கல்விக் கோட்ட அதிபர்கள் சங்கத்தால் பளை கோட்டக் கல்வி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. (ஐ-9)





யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் புதிய கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவுக்கும் இந்திய கொன்சியூலர் ஜெனரல் பாலச்சந்திரனுக்கும் இடையில் நேற்றுமுன் தினம் சந்திப்புப்பொன்று இடம்பெற்றது. (ஐ)

# மகிந்த அரசை விட இந்த அரசு மோசம்

## கூறுகிறார் தமிழ் அரசின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.



யாழ்ப்பாணம், ஜூலை 20

சிங்கள - பௌத்த மயமாக்கல் முன்னைய ஆட்சியில் கூட இவ்வாறு நடைபெறவில்லை. தற்போதைய ஆட்சிலேயே அதிகமாக நடக்கின்றது. இந்த அரசு இதனை கண்டும் காணாமலும் இருக்கின்றது. இந்த நிலமை தொடர்ந்தால், கூட்டமைப்பு அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்துக் கொண்டிருக்கும் என்று எண்ண முடியாது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும், வடக்கு மாகாண முன்னாள் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.


அவரது பணிமனையில் நேற்றுமுன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களாக சிங்கள - பௌத்த மேலாதிக்க அடாவடித்தனம் அதிகரித்துள்ளது. கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிள்ளையார் ஆலயத்தில் அமைதி வழியில் போராடியவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். தென்கையிலை ஆதீனத்தின் மீது எச்சில் தேநீர் ஊற்றியது மிகமோசமானது. முல்லைத்தீவு நீராவியடி ஆலயத்திலும் சிங்கள - பௌத்த மேலாதிக்கம் அடாவடியில் ஈடுபடுகின்றது. இது இப்போது மலையகத்துக்கும் பரவியிருக்கின்றது. இந்த நோய் ஆரோக்கியமானது அல்ல.

இது தொடர்பில் வெளிப்படையாகச் சொன்னால், முன்னைய ஆட்சிக் காலங்களில் கூட இது போன்று நடைபெறவில்லை. ஆனால் நல்லாட்சி என்று நாங்கள் உதவிய இந்த அரசின் காலத்திலேயே படுமோசமான முறையில் இந்தச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இரண்டு ஆண்டுகளில் தீர்வு தருவோம் என்று தலைமை அமைச்சர் ரணில் சொல்கின்றார். இங்கு நடக்கின்ற அடாவடிகளைக் கட்டுப்படுத்தாமல் கைகட்டி வேடிக்கை பார்ப்பவர்களால் தீர்வு எப்படிச் சாத்தியம்?

அரசு தொடர்ந்தும் இவற்றைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கை பார்த்தால் பன்னாட்டுச் சமூகத்தால் இவை கவனிக்கப்படும் என்பதை சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் புரிந்து கொள்ளவேண்டும். இது வெறுமனே தமிழ் மக்களோடு அல்லது இந்துக்களோடு முடிந்து விடக் கூடிய விடயமல்ல என்பதையும் வேறுபலரும், வேறு நாடுகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். இந்த விவகாரம் இன்னும் மோசமாகும்போது பன்னாட்டுத் தலையீடு வருவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று நான் நினைக்கின்றேன் - என்றார். (ஓ.5,ரி1)



# மன்னார் பொது மருத்துவமனையின் குறைபாடுகள் செயலரின் கவனத்துக்கு

## நேற்றைய கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டன

மன்னார், ஜூலை 20

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாகவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன. குறைபாடுகளை நிவர்த்திசெய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும், மன்னார் மாவட்டச் செயலருக்குமிடையில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. அதன்போதே இந்த விடயம் மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனை அபிவிருத்திக்குழுவின் அழைப்பின் பேரில் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் பொது மருத்துவமனைக்குச் சென்று அபிவிருத்திக் குழு நிர்வாகத்துடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார். இந்த நிலையிலே நாடாளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் நேற்றையதினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க.செந்தூர்பதிராஜா, பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஒஸ்மன் டெனி, மன்னார் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.காண்டிபன் மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக் குழுவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (த-56)

# கம்பங்களை அகற்றிய பின்னரே அனுமதி வழங்குவது பற்றி முடிவு

## மாநகர சபை அமர்வில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாண மாநகர சபையின் அனுமதி பெறாது நட்ட கேபிள் கம்பங்களை அகற்றிய பின்னரே அத்தகைய நிறுவனங்களுக்கு, கேபிள் கம்பங்களுக்கான அனுமதி தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் முதல்வர் இ. ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது. அதில் இந்த விடயம் பற்றிப் பேசப்பட்டது.

அனுமதியின்றி நட்ட கம்பங்களை மாநகர சபை கடந்த மாதம் அகற்றியது. அவ்வாறு அகற்றப்பட்ட போது தமது சொத்துக்குச் சேதம் ஏற்படுத்தியதாக யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. உள்ளூராட்சி சபைகளின் எல்லைப் பகுதிகளிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைகளின் ஆளுகையாகவுள்ள வீதியோரங்களிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் மின் கம்பம் நட முடியும். அவற்றுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் தடைபோட முடியாது என்று உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் அரசதலைவர் சட்டத்தரணி அலி சப்ரி ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபை சார்பில் அரசதலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி, உள்ளூராட்சி அதிகார சபைகளின் அனுமதி தேவையில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபைகளின் அனுமதி போதுமானது என்பதனை ஏற்க முடியாது. வீதி அபிவிருத்தி அதிகார சபை தனது வீதியோரம் நடுவதற்கான சிபார்சை அல்லது அனுமதியை வழங்க முடியும். ஆனால் இது உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரமாகும். ஆகவே உள்ளூராட்சிச் சபைகளில் அனுமதி பெற்றே ஆக வேண்டும் என்று வாதிட்டிருந்தார். அவற்றைப் பரிசீலித்த நீதியரசர்களான யசந்த கொதாகொட மற்றும் அர்ச்சுனா ஒபயசேகர ஆகியோர் உள்ளூராட்சி மன்ற எல்லைகளுக்குள் நடும் கம்பங்களுக்கு குறித்த வீதியின் ஆளுகைத் திணைக்களத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியையும் பெற்றுக்கொள்ள நிறுவனம் சார்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நிறுவனம் 12ஆம் திகதியிட்ட விண்ணப்பம் மூலம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் கம்பங்கள் நடுவதற்கு அனுமதி கோரியுள்ள விடயம் மாநகர சபையில் நேற்றுமுன்தினம் நடந்த அமர்வில் ஆராயப்பட்டது.

மாநகர சபையை மதியாது எதேச்சையாகக் கம்பங்களை நட்டு சபை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட நிறுவனத்துக்கு கம்பங்கள் நட்ட பின்னர் அனுமதி வழங்க முடியாது.

இலங்கை மின்சார சபை நட்டு கழித்து விடப்பட்ட வைற்றையே குறித்த நிறுவனம்பெற்றுநட்டுள்ளது. இதற்கு அனுமதி வழங்கினால் இந்தக் கம்பங்களில் ஏதும் அசம்பாவிதம் இடம்பெறும்போது சபை பொறுப்புக் கூற முடியாது. எனவே குறித்த கம்பங்கள் அனைத்தும்அகற்றப்பட்டே ஆக வேண்டும். குறித்த நிறுவனம் அவற்றை அகற்றிய பின்னரே இது தொடர்பில் ஆராய முடியும் என்றும் மாநகர சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-105)





# மதில் அமைக்கும் பணி நிறைவு

மன்னார், ஜூலை 20

வவுனியா நெடுங்கேணி சேனைப்பிலவு உமையாள் வித்தியாலயத்தின் மதில் அமைக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் கிராமிய துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக மதில் அமைக்கும் வேலைத்திட்டத்துக்கு 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

வேலைகள்நிறைவடைந்து பாடசாலையிடம் கையளிக்கும் நிகழ்வு அதிபர் தலைமையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ச.ரூபன் நிகழ்வில் கலந்து கொண்டு பெயர்பலகையை திரைநீக்கம் செய்தார். (த-213)





யாழ்ப்பாணம் உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் ஆங்கிலக் கண்காட்சி வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ஜ-70)

# திருக்கேதீச்சர வரவேற்பு வளைவை யாழ்ப்பாண ஆயர் அனுமதித்திருப்பார்

## தெல்லிப்பழையில் அவரே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

இன்றைய சூழலில் சைவ மக்களும் கத்தோலிக்க மக்களும் ஒற்றுமையாக இருப்பது எமக்கு நன்மையாகும். திருக்கேதீச்சரவளைவு உடைக்கப்பட்டமை கவலைக்குரியது. எனது பகுதியாக இருப்பின் வரவேற்பு வளைவு கட்டுபவர்களை வரவேற்று என்ன உதவி வேண்டுமென்று கேட்டிருப்பேன். அவர்களுக்கு உணவும் வழங்கி ஒற்றுமையை வெளிக்காட்டியிருப்பேன். இதை விடுத்து பகையை வளர்ப்பது தவறு.

இவ்வாறு யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார் என்று, கலாநிதி ஆறுதிருமுருகன் அனுப்பிவைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பதினொராவது ஆண்டு நினைவு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கலாநிதி ஆறு. திருமுருகன் அனுப்பிவைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தங்கம்மா அப்பாக்குட்டியின் மேற்படி நிகழ்வில் பார்வையாளராகக் கலந்து கொண்ட அடிகளாரை, விழாத்தலைவர் உரையாற்றுமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்று உரையாற்றினார்.

திருக்கேதீச்சர ஆலயப் பாதையில் அமைக்கப்பட்ட வளைவு உடைக்கப்பட்டது தொடர்பாக ஏற்பட்ட குழப்பநிலை விடயமாக விழாவுக்குத் தலைமை தாங்கிய கலாநிதி ஆறு. திருமுருகன் எடுத்துச் சொன்னார்.

'இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்று மிகவும் கவலையடைந்தேன். இன்றைய சூழலில் சைவ மக்களும் கத்தோலிக்க மக்களும் ஒற்றுமையாக இருப்பது எமக்கு நன்மையாகும். திருகேதீச்சர சூழலில் வளைவு உடைக்கப்பட்டமை கவலைக்குரியது. எனது பகுதியாக இருப்பின் நான் வரவேற்பு வளைவு கட்டுபவர்களை வரவேற்று என்ன உதவி வேண்டுமென்று கேட்டிருப்பேன். அவர்களுக்கு உணவும் வழங்கி ஒற்றுமையை வெளிக்காட்டியிருப்பேன். இதை விடுத்து பகையை வளர்ப்பது தவறு. சில மாதங்களுக்கு முன்பு நான் மன்னார் போயிருந்தபோது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருக்கேதீச்சரத்தைப் பார்ப்பதற்குச் சென்றிருந்தேன். பாதையில் பாலம் கட்டும் வேலை நடந்ததால் மற்றைய பாதையால் சென்று சுற்றிப்பார்த்து வந்தேன். இவ்விடயம் தொடர்பாக பிரச்சினைகள் தொடராமல் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறேன். எமக்கு சமீபமாக சைவக் கோவில் உண்டு. நாமும் அவர்களும் மிகவும் அன்னியோன்னியமாக இருக்கிறோம்' என்றார் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்.

இதேவேளை, நான் இளவாலையில் பணியாற்றிய காலத்தில் தங்கம்மா அப்பாக்குட்டிஅம்மையாரோடுபழகும் வாய்ப்புப் பெற்றேன். அவர்களின் சமூக சேவையை நான் என்றும் உயர்வாக மதிக்கிறேன். அம்மையார் எல்லா மதத்தவர்களோடும் மிகவும் அன்பாகப் பழகினார். இன்று அவர் பாதையில் தொண்டாற்றும் நண்பர் கலாநிதி ஆறு. திருமுருகனை நான் நன்கு அறிவேன். அவர் சிறந்த சேவையாற்றிவருகிறார். இந்த மாதிரியான அன்பும் நட்பும் தொடரவேண்டும். திருக்கேதீச்சர பிரச்சினை அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களால் ஒற்றுமையாகத் தீர்க்கப்படவேண்டும்' என்றும் அவரது உரையில் குறிப்பிட்டார்.

மேற்படி விழாவில் உரையாற்றிய தலைவர் ஆறுதிருமுகன், கேதீச்சரத்தின் வரவேற்பு வளைவை உடைத்தமையையும், பின்னர் பிரதேச சபை நிரந்தர வரவேற்பு வளைவை கட்டுவதற்கு அனுமதி வழங்கிய பின் அங்கு கத்தோலிக்க மதத்தவர்களின் கோரிக்கை காரணமாக வளைவை கட்டுவதை நிறுத்தியுள்ளதையும் பற்றி கவலை தெரிவித்து, யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்கள் இவ்விடயம் தொடர்பாக தலையிட்டு சைவ மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள மனக்கவலையைப் போக்க வேண்டும் என்று குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# அரசியல் கருத்தமர்வு வவுனியாவில் நாளை

தமிழ் மக்களின் அரசியல் எதிர்கால நிலையியல் தொடர்பான கருத்தமர்வு வவுனியாநகரவிருந்தினர் விடுதியில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், கருத்தியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

'நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதிர்காலமும்' என்னும் நோக்கு நிலையில் இந்தக் கருத்துப் பகிர்வுறவாடல் நடைபெறவுள்ளது.

கருத்தமர்வில் 'பன்னாட்டு அரசியலும் தமிழ்த் தேசிய வகிபாகமும்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே. ரி. கணேசலிங்கம், 'அரசியல் இருப்பும் தமிழ் மக்களின்-எதிர்காலமும்' என்ற தலைப்பில் கருத்தியலாளர் நிசாந்தன், 'நிழல் போராகிவிட்ட நில அபகரிப்பும் மனித உரிமை மீறல்களும்' என்ற பொருளில் தமிழர்மரபுரிமைப்பேரவை இணைத் தலைவர் வி. நவநீதன், 'கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் சவால்களும் சந்தர்ப்பவாத அரசியலும்' என்ற தலைப்பில் தமிழ் மக்கள் பேரவைத் இணைத்தலைவர் த. வசந்தராசா ஆகியோர் உரையாற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-60)

# நானாட்டான் பகுதி கடற் பரப்புக்குள் இந்திய மீனவர் அத்துமீறல் தாராளம்

## கடற்படை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் தெரிவிக்கிறார்

மன்னார், ஜூலை 20

நானாட்டான் பிரதேச கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால், அங்கு கடற்றொழிலை நம்பியுள்ள இரண்டாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன என்று நானாட்டான் பிரதேச மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ராஜன் மார்க் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச செயலர் மா. சிறிஸ்கந்தகுமார் தலைமையில் அரசஅதிகாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அங்கு நேற்று முற்பகல் 10 பத்து மணிக்கு நடைபெற்றது.

அதில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நானாட்டான் பிரதேசம் தனி ஒரு கடற்றொழில் பரிசோதகர் பிரிவைக் கொண்டது. இங்கு நான்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் காணப்படுகினறன. இந்தப் பிரிவில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய செயற்பாட்டால் வங்காலை, அச்சங்குளம், நறுவிலிக்குளம், மோமஸ்புரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.

மன்னார் அச்சங்குளம் ஒடுங்கிய கடற்பரப்பில் பட்டி வலை, சுருக்குவலை, கரைவலை, பாய்ச்சு வலை அட்டை மற்றும் சங்கு இந்திய மீனவர்களின் அத்து மீறிய நுழைவு காரணமாக இங்குள்ள எமது மீனவர்களின் தொழிற்பாடுகளும் வாழ்வாதாரங்களும் மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றன. இந்திய மீனவர்களின் அத்துமீறல் தலைமன்னார் தொடக்கம் நெடுந்தீவு வரை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு தென்புறமாகவுள்ள மன்னாரில் இருந்து கற்பிட்டிவரை அத்து மீறல்கள் தொடர்கின்றன.



இந்திய மீனவர்கள் வாரத்தில் மூன்று நாள்கள் ஒன்றை விடுத்து ஒரு நாள் வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். இதனால் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்டு வாழும் எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ராஜன் மார்க் தெரிவித்தார்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் பவநிதி கருத்து தெரிவித்ததாவது:

முன்பு காணப்பட்டதை விட இந்திய மீனவர்களின் அத்து மீறல் குறைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் மன்னார் தாழ்வுப்பாடு கடற்பகுதியில் அத்து மீறிய இந்திய மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட ஐவர் மீரியகம முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்களுடைய படகுகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. அப்படித் தொடர்ச்சியான நெருக்குதல்களை கொடுக்கும் போது, இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பது காலப்போக்கில் இல்லாமல் போய்விடும். ஆனால் தற்போது மன்னார் முள்ளிக்குளம் பகுதியால் வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முள்ளிக்குளம் கடற்படையினருடன் பேசி இதற்குத் தீர்வு பெறப்படும் என்று தெரிவித்தார்.

இந்த கூட்டம் நானாட்டான் பகுதியிலிருக்கின்ற அரச திணைக்களங்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக பிரதேச மட்ட அபிவிருத்தியை நிலைபேறாகக் கொண்டு செல்வதை நோக்காகக் கொண்டு இந்தக் கூட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சகல திணைக்களங்களின் தலைவர்களும் நிச்சயம் கலந்து கொள்ள வேண்டும் என்று பிரதேச செயலர் கோரியிருந்தபோதும் சில திணைக்களங்கள் கலந்து கொள்ளவில்லை என்பதையிட்டு பிரதேச செயலர் கூட்டத்தில் அதிருப்தி வெளியிட்டார்.

(கு-213)

# வீதி விபத்தில் மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வீதி விபத்தில் காயமடைந்த நிலையில் பாடசாலை மாணவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்துச் சம்பவம் எழுதுமட்டுவாழ் கரம்பகம் ஏ 9 முதன்மைச் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

எழுதுமட்டுவாழ் கரம்பகத்தைச் சேர்ந்த கிருஷ்ணரூபன் கிருஷாந் (வயது -17) என்ற மாணவனே காயமடைந்தார். உயர்தர வகுப்பில் கற்கும் மாணவன் பரீட்சைக்காக ஈருருளியில் சென்ற வேளையில் வீதியால் வந்த வாகனம் ஒன்று மோதிவிட்டு தப்பியோடியுள்ளது எனவும் அவ்வழியே வந்தவர்கள் மாணவனின் பெற்றோருக்கு அறிவிக்கவே அங்கு வந்த தாயார் மயங்கிய நிலையில் காணப்பட்ட மகனை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் காயமடைந்த மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# விபத்தில் படுகாயம்

வவுனியா, ஜூலை 20

வவுனியா தாண்டிக்குளம் கோவில் வீதியில் நேற்றுமுன்தினமிரவு 7.30 அளவில் நடைபெற்ற கோரவிபத்தில் இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

தாண்டிகுளத்திலிருந்து கோவில் வீதியுடாக குருமன்காடு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனமும் அதே பாதையில் எதிர் திசையில் வந்து கொண்டிருந்த உந்துருளியும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து நடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உந்துருளியைச் செலுத்திச் சென்ற தாண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த நல்லலிங்கம் உசாந்தன் (வயது - 23) என்பவரே படுகாயமடைந்து வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை நடத்தினர். டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (கு)

### கூட்டத்துக்கு கூட்டமைப்பு வராததால்

# வட - கிழக்கு உரிமை பிரச்சினையில் இனிமேல் தலையிடவேமாட்டேன்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் மனோ



யாழ்ப்பாணம், ஜூலை 20

அபிவிருத்தி, வாழ்வாதாரம், எனது அமைச்சின் அமைச்சரவை பத்திரங்கள் தவிர வடகிழக்கின் உரிமை பிரச்சினைகளில் இனித் தலையிடேன். உரிமை கோரிக்கைகள் தொடர்பில் எனது தலையீட்டை வடகிழக்கின் மக்கள் பிரதிநிதிகள் எழுத்து மூலமாக கோருவார்களாயின் அவை பற்றி பரிசீலிப்பேன்.

அரச தலைவர் மைத்திரியுடன் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய சில கட்சிகளின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளாமையை பெரிதுபடுத்த வேண்டாம். இது தொடர்பில் எனக்கு எவர் மீதும் கோபம் கிடையாது. அனைவராலும் கலந்து கொள்ள முடியாமை பற்றி நான் எனது கவலையை மட்டுமே பகிர்ந்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கன்னியா உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலவுடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பை நேற்றுமுன்தினம் அமைச்சர் மனோகணேசன் ஒழுங்கு செய்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்கவில்லை. கூட்டமைப்பின் தலைவருக்கு அழைப்பு அனுப்பப்படாமையால் கலந்து கொள்ளவில்லை என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உண்மையில் 11.30 க்கு ஆரம்பமாக வேண்டிய கூட்டத்தை, அரை மணித்தியாலம் தாமதித்து 12 மணிக்கே ஆரம்பித்தோம். எனது வேண்டுகோளை ஏற்று அரச தலைவர் தமது அறையில் காத்திருந்தார். அரச தலைவர் செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவார்கள் என நாம் காத்திருந்தோம். என்னுடன், அமைச்சர் பழனி திகாம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திலகராஜ், வேலுகுமார், வியாழேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

குறைந்தபட்சமாக இன்னொரு சகோதர சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களின் பொது பிரச்சினைகள் தொடர்பில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடுவதை நினைத்து நாம் மகிழ்வோம். அரச தலைவருடன் நடைபெற்ற கூட்டம், அவசர பிரச்சினை தொடர்பில் நடைபெற்ற அவசர கூட்டம். அனைவருக்கும் ஏதோ ஒரு முறையில் அவசர அழைப்பு தகவல் அனுப்பப்பட்டது, பரிமாறப்பட்டது, ஊடகங்களிலும் கூறப் பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் ராமநாதன் ஆகியோர் கலந்துகொள்ள இயலாமை தொடர்பில் தகவல் தெரிவித்திருந்தார்கள். அமைச்சர் ராதாகிருஷ்ணன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரவிந்த குமார், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் நாட்டில் இல்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் சுகவீனம் என்று கூறப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதனை தொடர்பு கொள்ள முடியவில்லை. ஏனையோர் பணிப்பளு காரணமாக கலந்துக்கொள்ளவில்லை என்று எண்ணுகிறேன்.

எது எப்படி இருந்தாலும், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார பணிகள் தொடர்பான அபிவிருத்தி, வாழ்வாதாரம், அமைச்சரவை பத்திரங்கள் ஆகிய மட்டங்களில் எனது பணி வடகிழக்கில் தொடரும். இவை பற்றி நானே முடிவு செய்வேன். இவை தவிர்ந்த வடகிழக்கின் உரிமை பிரச்சினைகள் தொடர்பில், வட-கிழக்கின் மக்கள் பிரதிநிதிகள் எழுத்து மூலமான கோரிக்கைகளை முன் வைப்பார்கள் எனில் அவற்றை நான் பரிசீலிப்பேன் என்றுள்ளது. (ஓ.5)

## கடவுள் வந்து எங்களை காப்பாற்றுவார்

### மனோகணேசன் நம்பிக்கை!!

யாழ்ப்பாணம், ஜூலை 20

விரைவில், ஏதாவது அதிசயம் நடந்து, தந்தை செல்வா சொன்னது போன்று கடவுள் வந்து எம்மை காப்பாற்றுவார் என்று நம்புகிறேன். இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

'மூன்று ஆண்டுகளுக்கு முன்னேரே, முதற்கட்ட மாக, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி தமிழ் நாடாளுமன்ற ஒன்றியத்தை அமைக்க வேண்டும், பின் அது தமிழ் பேசும் நாடாளுமன்ற ஒன்றியமாக விரிவு படுத்தப்பட்ட வேண்டும் என்று பகிரங்கமாக யோசனை கூறி இருந்தேன். இந்த ஒன்றியம் கட்சி, தேர்தல், பிரதேச பேதங்களுக்கு அப்பால் எமது பொதுவான பிரச்சினைகளை அரசு, சிங்கள கட்சிகள், பௌத்த தலைமைகள், பன்னாட்டுச் சமூகம் மத்தியில் கொண்டு செல்ல வேண்டுமெனவும் கூறியிருந்தேன். புதிய அரசமைப்பு என்பது நடைமுறையில் வராது. அதற்கான அரசியல் திட்டம் இங்கே இல்லை என்று இந்த அரசில் இருந்துக்கொண்டே கூறியிருந்தேன். இவை இன்று உண்மைகளாகி விட்டன.

எனினும் இவற்றுக்கு இன்று காலம் கடந்து விட்டது. விரைவில், ஏதாவது அதிசயம் நடந்து, தந்தை செல்வா சொன்னது போன்று கடவுள் வந்து நம்மை காப்பாற்றுவார் என்று நம்புகிறேன்' என மனோகணேசன் தெரிவித்துள்ளார். (ஓ.5)

# எங்களது உரிமைகளை மீட்க அழைக்கிறேன்

## மனோவின் கருத்துக்கு சச்சியின் பதில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

பொறுப்பற்றவர்களின் தாக்கத்தால் எங்களுக்காக உழைப்பதைக் கைவிடாதீர்கள். எங்களது உரிமைகளை மீட்டுத் தருவதற்காக உழையுங்கள். இலங்கை இந்துக்களின் சார்பில், சைவர்களின் சார்பில் உங்களை அழைக்கின்றேன். இவ்வாறு சிவசேனையின் அமைப்பாளர் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மக்களின் உரிமை விவகாரங்களில் தலையிடமாட்டேன் என்று மனோகணேசன் அனுப்பி வைத்த அறிக்கைக்கு பதிலளித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கத்தோலிக்க மேலாதிக்க முன்னெடுப்புகளால் மனோ கணேசனை வடக்கு - கிழக்குக்கு வராமல் தடுத்துள்ளனர். தாங்களும் செய்ய முடியாததை மனோகணேசன் செய்கிறார் என்ற பொறாமையும் அசூசையும் கத்தோலிக்கரல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்திருக்கலாம்.

மனோகணேசன் இலங்கை முழுவதற்கும் அமைச்சராக இருக்கிறார். இந்து சமயத் துறை அமைச்சராக இருக்கிறார். இலங்கை முழுவதும் இந்துக்கள் இருக்கிறார்கள். வடக்கு - கிழக்கில் அவர்கள் பெருமளவில் இருந்தாலும் மலையகத்தில் ஆறு மாவட்டங்களிலும் அவர்கள் கணிசமான தொகையில் இருக்கிறார்கள். மேற்கு, வடமேற்கு மாகாணங்களிலும் அவ்வாறு பழம் பாரம்பரியத்துடன் இருக்கிறார்கள்.

வடக்கு -கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக வாயடைத்துப் போய் நிற்கிறேன், ஒன்றும் செய்யமுடியாமல் இருக்கின்றேன், செய்யவும் மாட்டேன் என்ற மனோ கணேசனின் இந்த முடிவு வருந்தத்தக்கது. பொறுப்பற்ற சிலரால், அண்மைக்கால அரசியலுக்குள் நுழைந்த அரசியல்வாதிகளின் தாக்கத்தால் இந்த முடிவை அவர் எடுத்திருக்கக் கூடும்.

இந்த வாரம் சென்னைக்கு வந்த தமிழ் கூட்டமைப்புக் குழுவிடம் பாரதிய ஜனதாக் கட்சியின் முன்னாள் அமைச்சர் பொன் இராதாகிருஷ்ணன், பொறுப்பற்றவர்களை நீங்கள் பொறுப்புகளில் வைத்திருப்பதால்தான் தமிழர்களுடைய அடிமைத்தனம் தொடர்கிறது என்று கூறினார்கள்.

இலங்கையில் வாழும் இந்துக்கள் சார்பாக உங்களை வேண்டுகிறேன். வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பௌத்தர்களால், கிறிஸ்த வர்களால், முஸ்லிம்களால் நாங்கள் நசுக்கப்படுகிறோம். கோயில்கள் இடிகின்றன, வளைவுகள் உடைகின்றன, சிலைகள் எழுகின்றன, தொல்பொருளார் குடைகின்றனர், காளியை நீக்கிவிட்டு மசூதி, பிள்ளையாரை நீக்கிவிட்டுப் புத்தர், கண்ணகியை நீக்கிவிட்டு மரியாள். மனோ கணேசன் அவர்களே சைவர்கள் யாரிடம் போவார்கள்? இந்து சமயத் துறை அமைச்சராக இருக்கும் உங்களிடம் போகாமல் வேறு யாரிடம் நாங்கள் போவது?

மதமாற்றிகளின் கொடுமை தாங்க முடியவில்லை. எங்களது பெண்களைக் காதல் வலையில் வீழ்த்தி மூன்று நான்கு மனைவியரைக் கொண்டு வாழ்கின்ற சூழலில் நாங்கள் யாரிடம் போவோம்?

மனோ கணேசன் அவர்களே இலங்கை இந்துக்கள் சார்பில் உங்களை அழைக்கிறேன். சைவர்கள் சார்பில் உங்களை அழைக்கிறேன். எங்களது உரிமைகளை மீட்டுத் தருவதில் உழையுங்கள். பொறுப்பற்றவர்களின் தாக்கத்தால் எங்களுக்காக உழைப்பதைக் கைவிடாதீர்கள்

## பௌத்தர்களாலும் தமிழர்களுக்கு நெருக்குதல் என்று சிவசேனை முதல்தடவையாக தெரிவிப்ட

யாழ்ப்பாணம், ஜூலை 20

பௌத்தர்களாலும் தமிழர்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு நெருக்குதல்கள் இருக்கின்றன என்று சிவசேனை அமைப்பு முதல் தடவையாகத் தெரிவித்துள்ளது. அந்த அமைப்பின் அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

'வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பௌத்தர்களால், கிறிஸ்தவர்களால், முஸ்லிம்களால் இந்துக்கள் நசுக்கப்படுகிறோம். கோயில்கள் இடிகின்றன, வளைவுகள் உடைகின்றன, சிலைகள் எழுகின்றன, தொல்பொருளார் குடைகின்றனர், காளியை நீக்கிவிட்டு மசூதி, பிள்ளையாரை நீக்கிவிட்டுப் புத்தர், கண்ணகியை நீக்கிவிட்டு மரியாள்' என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிவசேனை அமைப்பு இதுவரை காலத்திலும் வெளியிட்ட ஊடக அறிக்கைகளில், பௌத்தர்களால் நெருக்குதல் இருப்பதாகவோ, அச்சுறுத்தல், ஆக்கிரமிப்பு இருப்ப[illegible]கவோ குறிப்பிட்டதில்லை. கிறி[illegible]தவர்களாலும், முஸ்லிம்[illegible]களாலுமே ஆக்கிரமிப்பு இருப்ப[illegible]கச் சுட்டிக்காட்டி வந்தது இந்து[illegible]ளையும், பௌத்தர்களையும் பி[illegible]வுபடுத்தும் வேலையை கிறிஸ்[illegible]வர்கள் முன்னெடுப்பதாகவு[illegible] அந்த அமைப்பு குறிப்பிட்டிருந்தது.

இந்த நிலையில் முதல் தடவை[illegible]யாக, பௌத்தர்களாலும் நெருக்கு[illegible]தல்கள் இருக்கின்றன என்று சிவ[illegible]சேனை அமைப்பு தனது அறிக்கையில்கூறியுள்ளது. (ஓ.5)

### கன்னியா விவகாரத்தில்

# தமிழருக்கு ஆதரவாக முஸ்லிம்கள் களமிறங்க வேண்டியது அவசியம்!

## *கல்முனை முதல்வர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 20

தமிழ்ச் சகோதரர்களின் பாரம்பரிய பிரதேசமான கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் தமிழ் சகோதரர்களுக்கு ஆதரவாக முஸ்லிம் அரசியல் தலைமைகளும் சிவில் சமூக அமைப்புகளும் பொது மக்களும் தமது அனைத்து சக்திகளையும் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப்.

இது தொடர்பில் அவர் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'கன்னியா வெந்நீரூற்று என்பது பண்டைய காலம் தொட்டு தமிழ் மக்களின் மதவழிபாட்டுத்தலப் பிரதேசமாக இருந்து வந்திருப்பதை வரலாற்று ரீதியாக நாம் அறிந்து வைத்திருக்கின்றோம். நாம் அறிந்த காலத்தில், எமது நேரடி பயணத்தின்போது கூட அப்பகுதியில் பௌத்த சின்னங்களோ சிலைகளோ இருந்திருக்கவில்லை. கடந்த சில வருடங்களாகவே இந்தச் சர்ச்சை திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் திருகோணமலையை சிங்களப் பெரும்பான்மையாக மாற்றுவதற்கு பகிரங்கமாகவே திட்டமிட்ட அடிப்படையில் சிங்களக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்த அதேவேளை தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை கபளீகரம் செய்ய ஆரம்பித்தனர். அதில் ஒன்றாகவே வெலிஓயா சிங்களக் கிராமம் உருவாக்கப்பட்டமையும் அதற்கு பாதுகாப்பு அரணாக குரங்கு பாஞ்சான் முஸ்லிம் கிராமத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டமையும் சரித்திரச் சான்றாகும்.

கல்லோயாத் திட்டத்தின் கீழ் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசமான அம்பாறையில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு, முஸ்லிம்களிடமிருந்து அப்பிரதேசம் கபளீகரம் செய்யப்பட்டதுபோன்றேதிருகோணமலையும் தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரலாற்றுப் பின்னணியிலேயே போருக்குப் பின்னரான காலப்பகுதியில் கன்னியாவை ஆக்கிரமிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாகவே அண்மைய அட்டகாசங்களும் அரங்கேறியுள்ளன. இந்த வெட்கக்கேடான சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

அவ்வாறே நுவரெலியாவின் கந்தப்பளை மாடசாமி இந்து ஆலயத்திலும் முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியிலும் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அத்துமீறல்கள், தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டுத்தலங்களை ஆக்கிரமிப்பதற்காக திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்ற சூழ்ச்சியாகவே பார்க்க முடிகிறது. இவை மிகவும் பௌத்த மதத்திற்கே இழுக்கான, அருவருக்கத்தக்க, பிற்போக்கான செயற்பாடுகளாகும்.

இதேபோன்று உலகின் முதல் மனிதன் ஆதம் (அலை) கால் பதித்த பாதமலை எனும் பகுதி முஸ்லிம்களுக்கும் உரித்தான வரலாற்றுப் பாரம்பரிய இடமாக இருந்தும், அப்பகுதியில் ஜெயிலானி பள்ளிவாசலும் இருக்கின்ற நிலையில், தற்போது அங்கு முஸ்லிம்களுக்கான உரிமை மறுக்கப்படுகின்ற சூழல் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. புத்த பகவான் இலங்கைக்கு வந்ததாக சரித்திரமே இல்லாதபோது பாபாத மலையை புத்தருக்கான இடமாக உரிமை கோருவது எந்த வகையில் நியாயமானது.

புதைபொருள் ஆராய்ச்சி எனும் போர்வையில் சிங்களவர்களை மாத்திரமே அலுவலர்களாகக் கொண்ட புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களமும் சரித்திர பேராசிரியர்களும் தங்களது இனத்திற்காக, அவர்களுக்கு வேண்டிய இடங்களையெல்லாம் பௌத்த புராதான இடங்களாக அறிவிப்புச்செய்து வருகின்றமையானது தமிழ், முஸ்லிம் சிறுபான்மை யினரின் பாரம்பரிய நிலங்களை அபகரிப்பதற்கான சூழ்ச்சியாகவே பார்க்க வேண்டியுள்ளது.

பேரின சக்திகளின் பின்புலத்தில் சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக அரங்கேற்றப்படுகின்ற இவ்வாறான அடாத்தான அக்கிரமங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை என்பது சிங்கள வர்களை பெரும்பான்மையாக கொண்ட நாடு என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான ஏனைய சமூகங்களின் உரிமைகளை மறுத்து, அவர்களை அடக்கியாள வேண்டுமென்கின்ற பேரின வெறிச்சிந்தனையையே நாம் எதிர்க்கிறோம்.

தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் இவ்வாறான பேரின மேலாதிக்க செயற்பாடுகளை தகர்த்தெறிவதற்கு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. இதன் அவசியத்தை இரு தரப்பினரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

அதேவேளை தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை காட்டிக்கொடுத்து, தமிழினத்திற்கு துரோகமிழைத்த கருணா அம்மான், தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் காட்டிக்கொடுத்து, தமிழ் மக்களின் ஆணைக்கு துரோகமிழைத்த வியாழேந்திரன் போன்றோர் கல்முனை வடக்கு உப செயலக விடயத்தில் பேரின வெறிபிடித்த பிக்குகளை இங்கு அழைத்துவந்து உதவிகேட்க முடியுமானால், கன்னியா வெந்நீரூற்று போன்ற தமிழினத்தின் இதயத்தில் பேரினவாதிகள் கைவைக்கின்ற போது மௌனம் காப்பது ஏன்? இந்த சூட்சுமங்களைத் தமிழ் மக்கள் மிகத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள்தொடர்பில்தமிழ் மக்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும்' என்றுள்ளது. (ம)

# கீத் நொயார் வழக்கில் ராஜபக்சவுக்கு மறியல்!

கொழும்பு, ஜூலை 20

த நேசன் பத்திரிகையின் முன்னாள் இணை ஆசிரியர் கீத் நொயார் கடத்தப்பட்டு சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டமை, ஆயுதத்தால் தாக்கப்பட்டமை, கொலை செய்ய முயற்சிக்கப்பட்டமை தொடர்பில் ஒன்பதாவது சந்தேக நபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கோப்ரல் லலித் ராஜபக்ச கல்கிசை நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஊடகவியலாளர் உபாலி தென்னகோன் தாக்குதல் விவகாரத்தில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் அவர் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே, சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக, கண் கண்ட சாட்சி ஒன்றின் அடிப்படையில் அவரை ஊடகவியலாளர் கீத் நொயார் விவகாரத்தில் சந்தேக நபராகச் சேர்த்ததாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை குறித்த விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நீதிமன்றுக்கு அறிவித்தார்.

இதனையடுத்து கல்கிசை மேலதிக நீதிவான் சி.எச்.வீ.லியனகே சந்தேக நபரான லலித் ராஜபக்சவை எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன் அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கவும் அறிவித்தல் விடுத்தார். (ஓ.5)

# ஐ.நாவுக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவும்

## *பிரிட்டிஷ் அமைச்சர் வலியுறுத்து*



கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் அன்றூ மியுரிசன் வலியுறுத்தியுள்ளார்.

'மனித உரிமைகள் சபைக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு பிரிட்டன் தொடர்ந்தும் இலங்கையை வலியுறுத்தி வருவதுடன் ஆதரவும் வழங்கி வருகின்றது.

இலங்கையில் நீதி மற்றும் நிரந்தர நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இதுவே மிகச்சிறந்த கட்டமைப்பு என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

பிரிட்டன் அரசு தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு இதனை வலியுறுத்தி வருகின்றது. பிரிட்டன் தூதுவரும் இதனை தெரிவித்து வருகின்றார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை இன்னமும் பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இலங்கை அரசை அரசமைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வை வழங்க வேண்டும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ.5)

# இலங்கையில் தளம் அமைக்கும் நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லை

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் இராணுவத் தளம் எதையும் அமைக்கும் நோக்கம் அமெரிக்காவுக்குக் கிடையாது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் நன்மையளிக்கக் கூடிய வகையில், பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்துவதன் மூலம், இந்தியப் பெருங்கடலில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதே எமது நோக்கம்.

வருகைப் படைகள் உடன்பாட்டை புதுப்பித்துக் கொள்வதானது, மனிதாபிமான உதவி, இடர் மீட்பு உள்ளிட்ட விடயங்களில் இணைந்து செயற்படுவதற்கான ஆதரவை அளிப்பதற்கும், இந்தியப் பெருங்கடலில் பகிரப்பட்ட முன்னுரிமைகளுக்குமான வசதிகளை வழங்கும். அமெரிக்க படைத் தளத்தை அமைப்பதோ, அங்கு நிரந்தரமான இராணுவபிரசன்னத்தை கொண்டிருப்பதே எமது நோக்கம் அல்ல.

1995ஆம் ஆண்டு பரிமாறிக் கொள்ளப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், சில புதிய வசதிகளுடன் வருகைப் படைகளை உடன்பாட்டை புதுப்பித்துக் கொள்ளும் பேச்சுக்களே நடந்து வருகின்றன, என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஓ.5)

# மாகோ - ஓமந்தைத் தொடருந்து பாதையை மீளமைக்கிறது இந்தியா

கொழும்பு, ஜூலை 20

குருநாகல் மாவட்டத்தின் மாகோ தொடக்கம் ஓமந்தை வரையிலான வடக்குக்கான133கிலோ மீற்றர் தொடருந்து பாதையை இந்திய உதவியுடன் மீளமைப்புச் செய்வதற்கான உடன்பாடு நேற்றுமுன்தினம் கையெழுத்திடப்பட்டுள்ளது. 91.26 மில்லியன் டொலர் செலவிலான இந்தத் திட்டத்தை இந்தியாவின், இர்கோன் நிறுவனம் நிறைவேற்றவுள்ளது.

12 தொடருந்து நிலையங்கள், 7 நிறுத் தங்கள், 78 குறுக்குப் பாதைகளை உள்ளடக்கியதாக, இந்தப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது. கடந்த 115 ஆண்டுகளில் முதல் முறையாக இந்த தொடருந்துப் பாதை மீளமைக்கப்படவுள்ளது.

இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டதும், தற்போது 60 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யக் கூடிய தொடருந்துகள், இரட்டிப்பு வேகத்தில், மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்துடன் பயணம் செய்ய முடியும். அத்துடன் பராமரிப்புச் செலவினங்களும் குறையும்.

2017ஆம்ஆண்டுஇலங்கையின் தொடருந்து துறையின் அபிவிருத்திக்கு, 318 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்கும் உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திட்டது. இந்த கடன் திட்டத்தின் கீழேயே, மாகோ ஓமந்தை தொடருந்து பாதை மீளமைப்பு பணியும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான உடன்பாட்டில், இர்கோன் நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான சுனில் குமாரும், நெடுஞ்சாலைகள், வானூர்தி சேவைகள் அமைச்சின் செயலர் ஜெயம்பதியும் கையெழுத்திட்டனர். (ஓ.5)

# ரூ. 2 பில்லியன் இழப்பீடு கேட்கும் மங்கள சமரவீர!

கொழும்பு, ஜூலை 20

தினியாவல பாலித தேரரால் முன்வைக்கப்பட்ட பொய்யான கருத்துகளுக்கு பெரியளவில் பரப்புரை பெற்றுக்கொடுத்தமை தொடர்பில் இரண்டு தனியார் தொலைக்காட்சிகளிடம் தலா ஒரு பில்லியன் ரூபா இழப்பீடு கோரி சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது கீச்சகப் பதிவில் இதை வெளியிட்டுள்ளார். (ஓ.5)

# ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான நகர்வு இலங்கையைப் பாராட்டுகிறது ஐ.நா. சபை

கொழும்பு, ஜூலை 20

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் இலங்கையில் அன்றாட நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கு சமகால அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை பாராட்டியுள்ளது.



ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதி கிலெமன்ட் வோவ்லேயை அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுச் சந்தித்தார். வெளிவிவகார அமைச்சில் இந்த சந்திப்பு நேற்று இடம்பெற்றது.
இதன்போதே சமகால அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை கிலெமன்ட் வோவ்லே பாராட்டினார்.
இந்தச் சந்திப்பில் அரசு மக்களின் ஒன்றுகூடும் உரிமையை உறுதிப்படுத்தியிருப்பதாக அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.
சட்டவாட்சி, ஜனநாயகம் என்பனவற்றை உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை உட்பட பன்னாட்டு நிறுவனங்கள் இணைந்து செயற்படுகின்றன. அவசரகால நிலை அறிவிக்கப்பட்டிருந்தாலும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைவரையறுக்கப்படவில்லை. எதிர்ப்பு நடவடிக்கைகள், தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பன நாட்டில் இடம்பெறுகின்றமை இதற்கு சிறந்த உதாரணமாகும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)



## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.ஜூலை 20
காரைநகர் பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கான கலாசார விளையாட்டு நிகழ்வுகள் வேதரடைப்பு முன்பள்ளி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.
சிறார்களின் கலை ஆர்வத்தை ஊக்குவிக்கும் முகமாக மகளிர் சிறுவர் அலுவல்கள் அபிவிருத்தி அமைச்சால் முன்பிள்ளை பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு தொடர்பான தேசிய வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



### அதிகூடிய மழையால்
## 9 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 20
கம்பஹா, கொழும்பு, கேகாலை, கண்டி, களுத்துறை, நுவரெலியா, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் என்று சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. கடந்த சில தினங்களாக நிலவும் மழையுடனான காலநிலைக்கமைய இரத்தினபுரி மாவட்டத்தில் 172.5 மில்லி மீற்றர் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அத்தோடு நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களிலும் சில பிரதேசங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
மன்னார், புத்தளம், குருணாகல், கம்பஹா, கொழும்பு, கேகாலை, கண்டி, களுத்துறை, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்று சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வழமைக்கு

கொழும்பு, ஜூலை 20
மகாவலி, களனி, ஜின் கங்கை, நில்வள, அத்தனகல ஓயா, கிரிந்தி ஓயா மற்றும் மாதுரு ஓயா ஆகியவற்றின் நீர் மட்டம் வழமைக்கு திரும்பி வருகிறது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
சமீப நாள்களாக பெய்த கடும் மழையை அடுத்து குறித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிகவும் உயர்வடைந்து காணப்பட்டு, அவற்றின் வான் கதவுகளும் திறக்கப்பட்டன.
இதையடுத்தே தற்போது நீர்மட்டம் ஓரளவு வழமைக்குத் திரும்பியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஒன்றாகப் பிறந்து ஒன்றாகவே இறந்த இரட்டைச் சகோதரிகள்
### மலையகத்தில் பெருந்துயர்





அக்கரப்பத்தனை டொரிங்டனில் ஆற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்ட இரண்டாவது சிறுமியின் சடலமும் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. நேற்றுமுன்தினம் மாலை ஒரு சிறுமியின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.
டொரிங்டன் பாடசாலையில் தரம் 07இல் கல்வி கற்கும் டொரிங்டன் தோட்டத்தைச் சேர்ந்த 12 வயதுடைய இரட்டைச் சகோதரிகளான மதியழகன் லக்ஸ்மி, மதியழகன் சங்கீதா ஆகிய மாணவிகளே ஆற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர்.
நேற்றுமுன்தினம் பிற்பகல் பாடசாலை விட்டு வீட்டுக்குச் செல்லும் வழியில் ஆற்று வெள்ளத்தில் இவர்கள் இருவரும் இழுத்துச் செல்லப்பட்டனர்.
இவர்களில் லக்ஸ்மியின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டு அக்கரப்பத்தனைப் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.
சங்கீதாவின் சடலத்தைத் தேடும் பணியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.
இந்தநிலையில், அவரின் சடலம் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு நீரேந்தி செல்லும் டொரிங்டன் தோட்டக் கால்வாய் ஒன்றிலிருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 300 அடி தூரத்திலேயே அவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.
குறித்த சடலமும் அக்கரப்பத்தனைப் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன்பின்னர் இரட்டைச் சகோதரிகளான இரு மாணவிகளினதும் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
பிரேத பரிசோதனைகளின் பின்னர் மாணவிகளின் சடலங்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும்.
சம்பவம் தொடர்பில் அக்கரப்பத்தனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
வழமையாக இந்த ஆற்றைக் கடந்தே டொரிங்டன் தோட்ட மாணவ, மாணவிகள் பாடசாலைக்குச் சென்று வருவது வழக்கம். எனினும், அக்கரப்பத்தனைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாக குறித்த ஆற்றில் வழமைக்கு மாறாக அதிக நீர் பெருக்கெடுத்தபோதே மாணவிகள் இருவரும் அதில் அகப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (22)

## கன்னியாத் தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
கன்னியாவில் தென்கையிலை ஆதீனம் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று மாலை யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் ஆலய முன்றலில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சைவ மகா சபை உட்பட, சைவ சமய அமைப்புக்களும், சமயப் பெரியார்களும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.
தென்கையிலை ஆதீனத்தின் மீது தேநீர் ஊற்றப்பட்ட சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், சைவ மக்களின் வரலாறுகள் திட்டமிட்டு அழிக்கப்படுவதைத் தடுக்க தமிழ் அரசியல்வாதிகள் கட்சி பேதம் இன்றி ஒருமித்துக் குரல் எழுப்ப வேண்டும் என்றும், நாடாளுமன்றில் ஒருமித்து எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (எ-26)

## ஹட்டன்- பன்மூர் தோட்டத்தில் மழையால் மக்கள் கடும் அவதி



கொழும்பு, ஜூலை 20
ஹட்டன் பன்மூர் தோட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக அந்தப் பகுதியில் வசித்து வந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
மலையகத்தின் நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதனால் பல குளங்களினதும், நீர்த்தேக்கங்களினதும் நீர் மட்டம் கணிசமான அளவில் உயர்ந்துள்ளதுடன், பன்மூர் குளத்தின் அணைக்கட்டின் கீழ்ப் பகுதியில் நீர் பெருக்கெடுத்ததன் காரணமாகவே வீடுகளில் வெள்ள நீர் பாய்ந்துள்ளது.
இதேவேளை பன்மூர் குளத்தின் அணைக்கட்டு உறுதியற்ற நிலையில் காணப்படுவதாகவும், இது எந்த வேளையிலும் உடைந்து ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
தற்போது மலையகத்தில் ஏற்பட்டுள்ள மழையுடனான காலநிலை நீடிக்குமானால் இந்தக் குளத்தின் நீர் அதிகரித்து அணைக்கட்டு உடைவதுடன், பன்மூர், அலுத்கம, டிக்கோயா ஆகிய பகுதிகளில் பல வீடுகள் நீரில் மூழ்கும் ஆபத்து ஏற்படலாம் என மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ம)

# மோடியின் ஆட்சிக் காலத்தை தவறவிட்டால் தீர்வு இல்லை

## பா.ஜ.கவினரிடம் கூட்டமைப்பினர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைத்தாலே ஒழிய பின்னர் தீர்வு கிடைக்காது என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இவ்வாறு இந்தச் சந்திப்பில் பங்கேற்ற மறவன்புலவு சச்சிதானந்தன் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவித்துள் ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர்களை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு அண்மையில் சந்தித்துப் பேசியது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரினார்கள். மோடி காலத்தில்தான் எங்களுக்கு அரசியல் தீர்வு வந்தால் வரும், பின்பு வராது என்றார்கள் கூட்ட மைப்பினர்.

முன்னாரில் கிறிஸ்தவர்க ளும், கிழக்கிலங்கையில் முஸ்லிம்களும் இந்துக்களை மோசமாக நடத்துகின்றார்கள். மதம் மாற்றுகின்றார்கள். பௌத்தர்கள். தமிழ் பகுதிகளில் பௌத்தர்கள் வாழாத இடங்களில் சைவக் கோயில்களுக்கு நெருக்கமாகப் புத்தர் சிலைகளை அமைத்து வருகின்றார்கள்.

இந்தச் சவால்களை இந்துக்கள் எதிர்கொள்வதற்கு பாரதிய ஜனதாக் கட்சி அரசு உதவவேண்டும் என்று கூட்டமைப்பினர் கோரினர்.

தமிழகத்தில் வாழும் 70 ஆயிரம் ஏதிலிகளை திருப்பி அனுப்ப உதவியாகவும் தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையே குறைந்த கட்டணத்தில் போக்குவரத்தை ஏற்படுத்தவும் கப்பல் சேவை ஒன்றைத் தொடங்குமாறு கூட்டமைப்பினர் கேட்டுக் கொண்டார்கள். தமிழ்ப் பகுதிகளில் பொருளாதாரத்தைப் பெருக்க இந்திய முதலீடுகளைக் கொண்டு வாருங்கள் உதவுங்கள் எனவும் கூட்டமைப்பினர் கேட்டார்கள்

யார் இந்த சுமந்திரன்? ஏன் அவர் இவ்வாறு நடந்து கொள்கிறார்? தமிழர்களுக்கு எதிரானவரா? சிங்களவர்களுக்கு ஆதரவானவரா? என்ற வினாக்க ளைப் பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் கூட்டமைப்பினரிடம் கேட்டார்கள்.

மறவன்புலவு சச்சிதானந்தன், மருத்துவர் மனமோகன் போன்றவர்கள் ஏற்கனவே எம்மோடு தொடர்பில் இருக்கிறார்கள். நீங்களும் எங்களை அடிக்கடி வந்து சந்தியுங்கள் என்று பாஜகவினர் கூட்ட மைப்பினரிடம் சொன்னார்கள் - என்றுள்ளது. (ஒ.5)

# கன்னியா சம்பவத்துக்கு மஸ்தான் எம்.பி. கண்டனம்

வவுனியா, ஜூலை 20



கன்னியாவில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டில் சட்டம் சரியாக செயற்படுகின்றதா என்பதில் சில கேள்விக் குறிகள் காணப்படுகின்றன. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் சந்திபொன்று நாடாளுமன்ற உறுப்பினரின் வவுனியா அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறித்த கன்னியா பிரச்சினையை கையில் எடுத்து இதற்கு ஒரு முடிவினைப் பெற்றுவிட்டு அரசிற்கு ஆதரவாக வாக்களித்திருக்கலாம். இந்த நாட்டில் இடம்பெற்ற சில சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டில் சட்டம் சரியாக செயற்படுகின்றதா என்பதில் சில கேள்விகள் காணப்படுகின்றன. அவ்வாறான ஒரு சம்பவங்கள் இடம்பெறும்போது சிலர் சட்டங்களை தமது கைகளில் எடுத்துக் கொள்கின்றார்கள். சிலர் தமது உரிமைகளை வென்றெடுக்க ஏதோ ஒரு வகையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றார்கள்.

அரசில் அங்கம் வகிக்கின்றவர்கள் அரசு எவ்வாறு செயற்படுகின்றது என்பதை அறிந்து செயற்படவேண்டும்.

இதேவேளை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் சோதனைச்சாவடியால் தினமும் பயணிகள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். எங்கேயோ குண்டு வெடித்ததற்கு. இங்கு சோதனைச்சாவடிகளை அமைத்துள்ளனர். தற்போதுள்ள நிலமைகளில் இந்தச் சோதனைச்சாவடி பேருந்து நிலையப்பகுதியில் தேவையற்றதே இதனை உடனடியாக அகற்றுமாறு கோரிக்கை விடுக்கின்றேன். என்றார். (ஐ)

# கலைஞர்களுக்கு அரச விருது வழங்கும் விழா ஓகஸ்ட்டில்!

## *கலைஞர்களை விண்ணப்பிக்குமாறு திணைக்களப் பணிப்பாளர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 20

தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் - கலைஞர்களுக்கான அரச விருது வழங்கும் விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் சிறப்பாக நடத்தப்படவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகளைத் தனியே பேணிப் பாதுகாத்து ஊக்குவித்துத் தம் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கலைஞர்களுக்காகவே அர்ப்பணித்து வாழ்கின்ற கலைஞர்களை அங்கீகரித்தும் வளரும் இளங் கலைஞர்களை ஊக்குவித்தும் அவர்களுக்கான அசர விருது வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு செயற்பாடாக இது அமையவுள்ளது.

தமிழர் தம் கலைகள் மற்றும் பண்பாட்டை வளர்த்தெடுக்கவும் மரபு வழி மற்றும் நவீன கலை வடிவங்களைப் பேணிக்காக்கவும் எழுத்து. பாடல், வாத்தியம், நாட்டியம், அறிவிப்பு, நெறியாள்கை, சினிமா, கிராமியக்கலைகள் மற்றும் நுண்கலைகள் முதலான பல்துறைக் கலைஞர்கள் அரசவிருது விழாவில் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

கலைக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணஞ்செய்து கலையுலகுக்குத் தம் கலைத்திறனால் இருபது வருடங்களுக்குக் குறையாத உன்னத பங்களிப்பை நல்கிய அறுபது வயதுக்கு மேற்பட்ட முத்த கலைஞர்கள், கலையுலகில் அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் இன்றும் செயற்படுகின்றனர்.

பதினைந்து வருடங்களுக்குக் குறையாத கலைத்துறைசார் சேவையை ஆற்றிவரும் முப்பது வயதுக்கு மேற்பட்ட அறுபது வயதுக்கு உட்பட்ட கலைஞர்கள் தமிழர் தம் கலைகள் மரபு வழி மற்றும் நவீன கலையம்சங்களை அழியாது காப்பாற்றும் மகோன்னத பணியிற் பத்து வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அர்ப்பணிப்பான சேவையிற் தம்மை ஈடுபடுத்தி இந்தத் நாட்டில் எதிர்வரும் காலத்தில் இந்தக் கலைகளை வாழ வைக்கப்போகும் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட முப்பது வயதுக்கு உட்பட்ட இளங் கலைஞர்கள் என்று மூன்று வகுதியினருக்கும் அரச விருது வழங்கி மதிப்பளிக்கப் படவுள்ளது.

இது கலைஞர்கள் மத்தியிற் புத்து ணர்வையும் உத்வேகத்தையும் ஏற்படுத்திக்கொள்ளும் எனவும் திணைக்களம் நம்புகிறது.

இவ்விருதுக்கான விண்ணபப்படிவங்களை தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் , இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பிராந்திய அலுவலகங்கள் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

www.hindudept.gov.lk என்ற திணைக்கள இணையத் தளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 'தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் - கலைஞர்களுக்கான அரச விருது வழங்கும் விழா - 2019' என்று கடித உறையின் இடது பக்க மேல்மூலையிற் குறிப்பிட்டு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248-1/1, காலி வீதி, கொழும்பு - 04. எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் என்று திணைக்களப் பணிப்பாளரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# முன்னாள் நீதிவானுக்கு எதிராக குற்றப்பத்திரம்

கொழும்பு, ஜூலை 20

எந்தவித அனுமதிப்பத்திரங்களும் இன்றி யானைக் குட்டியொன்றை தம்வசம் வைத்திருந்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் கொழும்பு மேலதிக நீதிவான் திலின கமகே உள்ளிட்ட நால்வருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

# கழிவுகள் சேகரிக்கும் வாளிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

கொக்குவில் வளர்மதி முன்பள்ளிக்கு திண்மக் கழிவுகள் சேகரிப்பதற்கான வழிகளை நல்லூர் பிரதேச சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன் கழிவு முகாமைத்துவத்தின் கீழ் கழிவுகள் சேகரிப்பது தொடர்பான பயிற்சிகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பிரதேச சபைத் தலைவர் த.தியாகமூர்த்தி தலைமையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்பள்ளியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

திண்மக் கழிவுகள் சேரிப்பதற்கு நான்கு வாளிகள் வழங்கப்பட்டு அதில் கண்ணாடி, குப்பை, பொலித்தின், கடதாசி போன்ற கழிவுகள் எந்தந்த வாளிகளில் சேகரிப்பது தொடர்பான பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சியின் போது சரியான வழிகளில் கழிவுகளை சேர்த்துக்கொண்ட மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (17)

# ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கன்னியாவுக்கும் செல்லவேண்டும்

## *நாடு கடந்த தமிழீழ அரசு கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 20

இலங்கைக்குச் சென்றுள்ள 'அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை' தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அதிகாரி கிளெமென்ற் நயாலெட்சோசிவூல் கன்னியா மற்றும் நீராவியடி பிள்ளையார் கோவில் பகுதிகளுக்கு நேரடியாகச் செல்ல வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு அவசர கோரிக்கையை விடுத்து ள்ளது.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத்தீவில் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான மதிப்பீடுகளை செய்வதற்கு, ஒன்பது நாள் பயணமாக ஐ.நா. அதிகாரி சென்றுள்ளார். தமது மரபுரிமையை காக்கவும், பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் அமைதியான முறையில் ஒன்றுதிரண்ட தமிழ்மக்கள் மீது ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இந்த அவசர கோரிக்கையை நாடுகடந்த தமிழீழ அரசு விடுத்துள்ளது.

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றில் அமைந்துள்ள தமிழர்களின் பாராம்பரிய வழிபாட்டுத்தலமான பிள்ளையார் கோவிலை இடித்துவிட்டு, அவ்விடத்தில் விகாரை கட்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்படு வதோடு, முல்லைதீவு செம்மலை நீராவியடி பிள்ளையார் கோவில் வளாகத்தை ஆக்கிரமித்து பௌத்த சிலையொன்று எழுப்பப் பட்டுள்ளது.

பாரம்பரியமான தமது வழிபாட்டுதளங்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு பௌத்தமயமாவதற்கு எதிராக தமிழர்கள் தமது மரபுரிமையைக் கோரும் அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

தமிழர்களின் இந்த அமைதி வழிப் போராட்டங்களை அரச கட்டமைப்பினரும், பிக்குகளும் தடுத்து நிறுத்தி அச்சுறுத்தி வரும் நிலையில், குறித்த சம்பவங்கள் மீது கவனம் செலுத்த ஐ.நா. அதிகாரியை நாடுகடந்த தமிழீழ அரசு கோரியுள்ளது. (ஒ.5)

# இந்தியாவில் வெள்ளப்பெருக்கு 100 பேர் சாவு - பலர் இடப்பெயர்வு

புதுடெல்லி, ஜூலை 20
இந்தியாவின் பல பகுதிகளிலும், நேபாளம் மற்றும் பங்களாதேஷிலும், பருவ மழை காரணமாக வெள்ளப்பெருக்கும், அதனால் பேரழிவும் ஏற்பட்டுள்ளது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் பலர் சிக்கியுள்ளனர். பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தியாவின் பிகார் மற்றும் வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாம் ஆகியவை அதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு மாநிலங்களிலும் இந்த இடரால் கிட்டத்தட்ட 100 பேர் சாவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவுகளும் ஏற்பட்டு வீடுகள் மூழ்கியுள்ளன. போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள், வீதிகள் மற்றும் தொடருந்துப்பாதைகள் தண்ணீர் சூழ்ந்துள்ளது. பிகாரில் 47 லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜூன் மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான பருவமழைக் காலத்தில் இந்த அழிவு பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டு புயலாலும், நிலச்சரிவுகளாலும் இந்தப்பிரதேசத்தில் ஆயிரத்து 200க்கு மேற்பட்டோர் சாவடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# தண்ணீரில் மூழ்கியது பூங்கா!

புதுடெல்லி, ஜூலை 20
இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்தின், கோலகாட், நாகோன் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் பரவியுள்ள காசிரங்கா தேசியப் பூங்காவில் உலகில் உள்ள ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகங்கள் பல வாழ்கின்றன. புலிகளின் வாழ்விடமாகவும் இது இருக்கிறது. மேலும், யானை, நீர் எருமை, பன்றி மான், சதுப்பு மான் எனப்படும் மான்வகைகள், பல வகையான பறவைகள் என எண்ணற்ற வன உயிரினங்கள் வாழ்கின்ற பகுதி இது.

தற்போது அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளபெருக்குக் காரணமாகக் குறித்த பூங்கா வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இந்தப் பூங்காவின் 95 சதவீத நிலப்பரப்பு வெள்ளத்தில் மூழ்கி விட்ட நிலையில் அங்கு வாழும் வன உயிர்கள் உயிருக்கு போராடும் மோசமான நிலை உருவாகியுள்ளது.

அசாம் மாநில வனத்துறையினரும், இந்தியக் கானுயிர் அறக்கட்டளை, விலங்குகள் நல பன்னாட்டு நிதிய அமைப்புகளைச் சார்ந்தோரும் உள்ளூர் மக்களின் உதவியோடு இணைந்து அங்கு வெள்ளத்தில் தத்தளிக்கும் உயிரினங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளோர், இதுவரை 61 வன உயிரினங்களை மீட்டு உள்ளனர். அதில் 46 உயிரினங்கள் உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வெள்ளம் பாதிக்காத வனப்பகுதியில் விடுவிக்கப்பட்டுள்ளன. 9 மான்களும், 2 ஒற்றை கொம்பு காண்டாமிருக குட்டிகளும் மீட்பு முகாமில் பராமரிப்பில் உள்ளன.



# வறட்சியால் வாடும் தமிழகத்தில் 4 நாள்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூலை 20
இந்தியாவின் தென் மாநிலமான தமிழகத்தில் வறட்சி நீடித்து வருகிறது. மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் தமிழகப் பகுதியில் காற்றில் ஏற்பட்டுள்ள வேக மாறுபாடு காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கடும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ந. புவியரசனே இவ்வாறு தெரிவித்தார். காற்றின் வேகமாறுபாடு காரணமாகவும், வெப்பச் சலனம் காரணமாகவும் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## தாக்கும் பறவைகள்!

அமெரிக்கா டென்வர் நகரின் மத்திய பகுதியில் உள்ள ஏரியில் தனது நாயை நடைப்பயிற்சிக்கு அழைத்து சென்றார் ஒருவர். அப்போது ஒரு பறவை தாழ்வாகப் பறந்து அவரை நோக்கிச் சென்று அவர் என்னவென்று சுதாரிப்பதற்குள்ளேயே, அது அவரின் தலையில் தாக்கிவிட்டுப் புதருக்குள் சென்றது. இவ்வாறான தாக்குதல்கள் அதிகரித்து வருவதாகக் கூறுகிறார் பறவைகள் பாதுகாப்பு அமைப்பான தேசிய ஆடுபம் அமைப்பின் கலிபோர்னியா பிரிவு இயக்குநர் அண்ட்ரியா ஜோன்ஸ்.

இவ்வாறான தாக்குதல் அதிகரிப்பதற்குக் காரணம் பறவைகளின் வசிப்பிடத்தை மனிதர்க்கிகள் ரமிப்பதுதான் என்கிறார் அவர். பறவைகள் தமது குஞ்சுகளை வளர்க்கும் காலக்கட்டத்தில்தான் இவ்வாறு தாக்குகின்றன. தமது குஞ்சுகளைக் காக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் தாக்குகின்றன. அந்தச் சமயத்தில் தன்னைவிடப் பெரிதாக இருக்கும் பிற விலங்குகளையும், பறவைகள் தாக்கும் என்று அவர் மேலும் தெரிவிக்கிறார்.

அமெரிக்காவில் மாத்திரமன்றி ஆஸ்திரேலியாவிலும் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகி உள்ளன.



## இன்றைய நாள்

**மேடம்:** லட்சிய நோக்குடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபார நடைமுறை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் விதத்தில் உபரி வருமானம் கிடைக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** உங்களின் முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு எதிலும் சிந்தித்துச் செயல்படுவதும், பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் நல்லது. எந்தவொரு காரியத்திலும் அதன் முழுப்பலனை அடையமுடியாமல் தடைகள் உண்டாகும்.

**மிதுனம்:** சிலர் உங்களிடம் கருத்துவேறுபாடு கொள்வர். தொழில் வியாபார நடைமுறையில் தடைகள் குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு பணம் கரையும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கடகம்:** பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். உற்பத்தி விற்பனை அதிகரித்து கூடுதல் லாபம் அடைவீர்கள். வழக்கு, விவகாரத்தில் அனுகூலத் தீர்வு வரும்.

**சிம்மம்:** பொதுநல நோக்குடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

**கன்னி:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகள் வெளியூர் பயணம் மேற்கொள்வர் அரசு வகையில் அனுகூலம் உண்டு.

**துலாம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி சீராக நிறைவேறும். பணவரவு திருப்தியளிக்கும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு ஏற்படும். பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை பிரகாசிக்கும். தொழில் வியாபாரம் செழித்து புதிய சாதனை படைப்பீர்கள். கூடுதல் வருமானம் கிடைக்கும். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் இருந்த குழப்பம் மறையும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி மேற்கொள்வீர்கள். உறவினரால் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டகரமாக சுபசெய்தி வந்து சேரும்.

**மகரம்:** திட்டமிட்ட செயல் நிறைவேற தாமதமாகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**கும்பம்:** குடும்ப சிரமம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் சீர் பெற கூடுதல் நேரம் பணிபுரிவது அவசியம். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

**மீனம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். சேமிக்க வாய்ப்புண்டு. பிள்ளைகள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்.

# ஈரானின் வானூர்தியை வீழ்த்தியது அமெரிக்கா!

## வளைகுடாவில் அதிகரித்தது பதற்றம்



வோஷிங்டன், ஜூலை 20
ஹோர்மோஸ் நீரிணைக்கு மேலாகப் பறந்த ஈரானின் ஆளில்லா வானூர்தியை அமெரிக்கக் கடற்படை சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். கடந்த வியாழக் கிழமையன்று இந்தச் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:
அமெரிக்கக் கடற்படைக் கப்பலுக்கு மிக அருகே ஈரானின் ஆளில்லா வானூர்தி பறந்தது. இதனால் அமெரிக்கத் தரப்பு தற்காப்பு நடவடிக்கைக்காக அதைச் சுட்டு வீழ்த்தியது.
இதை ட்ரம்ப் தெரிவித்தாலும், இந்தச் செய்தி குறித்துத் தங்களிடம் எந்தத் தகவலும் இல்லை என்று ஈரான் கூறியுள்ளது.
கடந்த ஜீன் மாதத்தில் அமெரிக்க இராணுவத்தின் ஆளில்லா வானூர்தியை ஈரான் சுட்டு வீழ்த்தியிருந்த நிலையில் தற்போது ஈரானின் வானூர்தியை அமெரிக்கா சுட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தால் மத்திய கிழக்கில் ஈரான் – அமெரிக்கா இடையேயான மோதல் போக்கு அதிகரித்துள்ளது.

## அமெரிக்கா-ஈரான் சமரசம்?

### ஈரான் தரப்பில் தெரிவிப்பு

நியூயோர்க், ஜூலை 20
ஈரான் மீது அமெரிக்க விதித்த பொருளாதாரத் தடையை நீக்கியுள்ளதா கவும் அதன் காரணமாகக் கணிசமான அளவு அணு ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு ஈரானின் அயலுறவு அமைச்சர் மொகமட் ஜீவாட் சரிப் உடன்பட்டுள்ளார் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஈரானின் ஆளில்லா வானூர்தியை அமெரிக்கா சுட்டுவீழ்த்தியு ள்ள நிலையில் இந்தச் செய்தி வெளியானது.
இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:
கடந்த வியா ழக்கிழமையன்று மொகமட் ஜீவாட் சரிப் நியூயோர்க்குக்குப் பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,
"அவர் ஒரு நல்ல தலைவர், அமெரிக்காவின் ஆளில்லா வானூர்தியை ஈரான்தாக்கிய நிலையிலும் அதற்காக உடனே போர் நடவடிக்கையில் இறங்காமல் பொறுமை காத்தார். ஆகவே அவருடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுவது கடினமானதல்ல. நாங்கள் போர் ஒன்று ஏற்படக் கூடிய ஒரு எல்லை வரை வந்தோம்.
பின்னர் அது ட்ரம்ப் எடுத்த இறுதி முடிவால் மாறியுள்ளது. எல்லாம் நன்றாகவே நடக்கும் என்று எண்ணி முன்னோக்கிச் செல்வோம்" என்று அவர் கூறியதாகப் பன்னாட்டு ஊடகங்களின் மேற்படிச் செய்தி அமைந்தது.

## வீதியில் உலாவிய புலியால் ரஷ்யாவில் பெரும் பரபரப்பு



மொஸ்கோ, ஜூலை 20
ரஷ்யாவில் புலி ஒன்று வீதியில் நடந்து திரிந்தது. இதனால் அந்தப் பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
ரஷ்யாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள இவானோவோ நகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது வீட்டில் ஒரு புலியை வளர்த்து வருகிறார். அண்மையில் அவர் அந்தப் புலியைத் தனது மகிழுந்தில் ஏற்றிக்கொண்டு சென்றார். அங்குள்ள வீதியில் வீதிச் சமிக்ஞைக்காக மகிழுந்தை நிறுத்தினார்.
அப்போது புலி திடீரென முரண்டு பிடித்தது. குறித்த இளைஞர் புலியைக் கட்டுப்படுத்த முயன்றார்.
மகிழுந்துக் கதவின் கண்ணாடி மூடப்படாமல் இருந்ததால் புலி வீதியில் குதித்தது. அந்த இளைஞர் புலியைப் பிடிக்க முயன்றார். ஆனால் அவரால் அது முடியவில்லை. அப்போது வீதியில் நடந்து சென்ற மக்கள்புலியைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.
பின்னர் அந்த இளைஞர் ஒருவாறாகத் தனது புலியைப் பிடித்துச் சென்றார்.
இது குறித்து அவர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

### ஜப்பான் கலையகத்தில் தீ

## சாவு எண்ணிக்கை அதிகரிப்பு!

டோக்கியோ, ஜூலை 20
ஜப்பானில் அனிமேஷன் கலையகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது. ஜப்பானின் கிழக்குப் பகுதியில் உள்ள கியோடோ நகரத்தில் அமைந்துள்ள அனிமேஷன் கலையகத்தில் கடந்த வியாழக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ ஏற்பட்டதற்குக் காரணம் இனம் தெரியாத நபர் ஒருவர் குறித்த கலையகம் மீது அமில வீச்சு நடத்தியதே என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தீயால் 13பேர் சாவடைந்ததாக முதல் கட்டத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், சாவு எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது. இந்த த் தீ விபத்தை ஏற்படுத்திய சந்தேகத்தில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த விபத்தில் காயப்பட்டிருந்த அவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.
தற்போது அவரிடம் விசாரணை நடந்து வருவதாகவும் அவருடைய பெயர் ஷின்ஜி ஒபா என்றும் கூறப்படுகிறது. அவரது யோசனைகளை (ஐடியாஸ்) அந்த அனிமேஷன் நிறுவனம் திருடிவிட்டதால் பழி வாங்கும் எண்ணத்தில் இந்த விபத்தை அவர் ஏற்படுத்தியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த விபத்தில் சாவடைந்தவர்களுக்கு ஜப்பான் மக்கள் மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

## காபூலில் குண்டுவெடிப்பு 2 பேர் சாவு

காபூல், ஜூலை 20
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்கு அருகில் நடந்த குண்டுவெடிப்பில் 2 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர்.
நேற்று நடந்த இந்தக் குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். பரீட்சை எழுவதற்காகப் பல்கலைக்கழகத்துக்கு வெளியே காத்துக் கொண்டிருந்த மாணவர்களே இந்தக் குண்டு வெடிப்புக்கு இலக்காகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு அங்கு வெடிக்கும் நிலையிலிருந்த இரண்டாவது குண்டைச் செயலிழக்கச் செய்ததாக காபூல் அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்தக் குண்டுத்தாக்குதலுக்கு இதுவரை எந்த ஆயுத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.
ஆப்கானிஸ்தானில் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மார் இராணுவ அதிகாரிகள் மீது அதிக தடைகள் விதிக்கப்பட வேண்டும்!

## ஐ.நா. பிரதிநிதி கோரிக்கை



கோலாலம்பூர், ஜூலை 20
மியன்மார் இராணுவ அதிகாரிகள் மீது அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் போதுமானவை அல்ல என்றும் மனித உரிமைகளை மீறியுள்ள அவர்களுக்கு இன்னும் அதிகமான தண்டனை கொடுக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதியான யங்கி லீ தெரிவித்தார்.
கடந்த வியாழக்கிழமை பன்னாட்டு ஊடகங்களுக்கு அளித்த செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
மியன்மாரில் ரோகிங்கியா முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தியமைக்காக மியன்மாரின் இராணுவத் தளபதியான மிங் அயுங்லேய்ங் மற்றும் மூத்த இராணுவத் தளபதிகள் மூவருக்கும் அவர்களுடைய குடும்பங்களும் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதைவிடப் பெரிய தண்டனையாக அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.
இராணுவத்தினரால் மியன்மாரில் ரோகிங்கியா முஸ்லிம்கள் மீதான வன்முறைகளும் மனித உரிமை மீறல்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அண்மையில் இந்த முஸ்லிம்கள் வாழும் பகுதிகளான ராக்கூனிலும், சின் மாகாணத்திலும் தொலைத் தொடர்பு சாதனங்களை மியன்மார் இராணுவம் செயலிழக்கச் செய்துள்ளது.
மனித உரிமைகளை மீறியுள்ளது. அந்த மாகாணங்களில் உருவாகிய இயற்கை இடர், வெள்ளம் போன்றவை ஏற்பட்ட காலப்பகுதியில் அந்தப் பகுதிகளுடன் தொடர்புகளை மேற்கொள்ள இயலாமல் போய்விட்டது.
அதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணை சேவைகளை வழங்க இயலாமல் போய்விட்டது எனக் கூறினார் யங்கி லீ.

**பின்னணி**
2017ஆம் ஆண்டில் மியன்மாரின் இராணுவம் அங்குள்ள பௌத்த பெரும்பான்மையினருடன் இணைந்து அங்கு சிறுபான்மையினராக வாழ்ந்த ரோகிங்கியா முஸ்லிம்கள் மீது வன்செயல்களை மேற்கொண்டது. கொலை, கொள்ளை, வன்புணர்வு, துன்புறுத்தல் என இந்த முஸ்லிம்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அண்ணளவாக 7இலட்சம் முஸ்லிம்கள் அகதிகளாக அண்டை நாடான பங்களாதேஷில் தஞ்சம் புகுந்தனர். அத்தோடு இந்தக் கொடூரத்தை வெளியுலகுக்குத் தெரியப்படுத்திய பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ் செய்தியாளர்களை மியன்மார் இராணுவம் சிறைப்பிடித்தது. பல அழுத்தங்களுக்கு மத்தியில் ஒரு வருடச் சிறையின் பின்னர் அவர்களை விடுவித்தது.

# வீடு புகுந்து தாக்கிவர்கள் ஊராரால் நையப்புடைப்பு

## பண்டத்தரிப்பில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பில் வீடு புகுந்த தாக்குதல் நடத்தியவர்கள் ஊர் மக்கள் வளைத்துப் பிடித்து நையப்புடைக்கப்பட்டதில் தாக்குதல் நடத்த வந்தவர்களில் இருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 உந்துருளிகளில் 8 பேர் ஆயுதங்களுடன் வந்தவர்கள், பண்டத்தரிப்பில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். வீட்டின் குடும்பத் தலைவரைத் தாக்கியதில் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

இந்தநிலையில் அந்தப் பகுதி இளைஞர்கள் அங்கு குவியத் தொடங்கினர். அதையடுத்துத் தாக்குதல் நடத்த வந்தவர்கள் தப்பியோடியுள்ளனர். அவர்களை ஊர் இளைஞர்கள் இணைந்து விரட்டிச் சென்றுள்ளனர். இரு உந்துருளிகளில் சென்ற நான்கு பேரை இளைஞர்கள் மடக்கிப் பிடித்தனர். மற்றைய இரு உந்துருளிகளில் வந்த நான்கு பேர் தப்பியோடியுள்ளனர்.

சிக்கியவர்கள் அனைவரும் 23 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களை ஊர் மக்கள் நையப்புடைத்ததில் அவர்களின் இருவர் படுகாயமடைந்தனர். பிடிக்கப்பட்ட நான்கு பேரும் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களில் இருவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்டவர்களில் ஒருவர் சங்கானைப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபரின் மகன் என்றும், இன்னொருவர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள பிரபல ஆசிரியரின் மகன் என்றும் மடக்கிப் பிடித்த ஊர் மக்கள் தெரிவித்தனர். (எ)

## சிறுமியை...

பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும். சிறுமியை இரண்டாவது மற்றும் மூன்றாது தடவை வன்புணர்ந்த குற்றங்களுக்காக எதிரிக்கு தலா 12 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்படுகிறது.

முதலாவது மற்றும் இரண்டாவது தண்டனைக் காலம் நிறைவடைந்த பின்னர் மூன்றாவது மற்றும் நான்காவது குற்றத்துக்கான சிறைத் தண்டனையை குற்றவாளி ஏக காலத்தில் அனுபவிக்க முடியும். அதனால் எதிரி 27 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தாயாரின் பாதுகாப்பிலிருந்த 16 வயதுக்குட்பட்ட சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்த குற்றச்சாட்டில் இராசகுமார் திருக்குமார் என்பவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சிறுமி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் ஆரம்ப விசாரணைகள் நடைபெற்றன. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வவுனியா மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குற்றப் பத்திரிகை எதிரிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டபோது அவர் சுற்றவாளி என மன்றுரைத்தார். அதனால் வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் இடம்பெற்றது. வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் வழக்கை நெறிப்படுத்தினார். எதிரி சார்பில் சட்டத்தரணி பிரசாத் காரியவசம் முன்னிலையானார்.

எதிரி தன்னைக் கடத்திச் சென்று வன்புணர்ந்தமை தொடர்பில் முதலாவது சாட்சியான பாதிக்கப்பட்ட சிறுமி சாட்சியமளித்தார். சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டமை தொடர்பில் மருத்துவ பரிசோதனையில் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டது என்று நிபுணத்துவ சாட்சியத்தில் சட்ட மருத்துவ அதிகாரி சாட்சியமளித்தார்.

எதிரி கூண்டுச் சாட்சியமளித்தார். அவர் தான் இந்தக் குற்றங்களைச் செய்யவில்லை என்று மட்டுமே கூண்டுச் சாட்சியம் வழங்கினார். அரச தரப்புச் சாட்சியங்களை சந்தேகத்துக்கிடமானதாக்கும் வகையில் எதிரி தரப்பு வாதங்களை முன்வைக்கவில்லை.

சாட்சியங்கள், எதிரி தரப்பு விசாரணை மற்றும் சமர்ப்பணங்கள் நிறைவடைந்த நிலையில் வழக்கின் தீர்ப்புக்காக வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றைய தினத்தைத் தீர்மானித்திருந்தது.

எதிரி மீதான 4 குற்றச்சாட்டுக்களும் வழக்குத் தொடுநரால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன. அதனால் எதிரியை 4 குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாக மன்று தீர்மானிக்கின்றது என்று மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் தீர்ப்பளித்தார்.

சிறுமியைக் கடத்திச் சென்ற குற்றத்துக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. அத்துடன் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படுகிறது. தண்டப் பணம் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

சிறுமியை முதலாவது தடவையாக வன்புணர்ந்த குற்றத்துக்கு எதிரிக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படவேண்டும். அதனை வழங்காவிடின் 12 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். மேலும் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறினால் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

சிறுமியை இரண்டாவது தடவை வன்புணர்ந்த குற்றத்துக்கு எதிரிக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படவேண்டும். அதை வழங்காவிடின் 12 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும். அதைச் செலுத்தத் தவறினால் 6 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

சிறுமியை மூன்றாவது தடவை வன்புணர்ந்த குற்றத்துக்கு எதிரிக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டச் சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படவேண்டும். அதை வழங்காவிடின் 12 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும். அதைச் செலுத்தத் தவறினால் 6 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

எதிரி முதலாவது மற்றும் இரண்டாவது குற்றங்களுக்கான முறையே 3 மற்றும் 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும். மூன்றாவது மற்றும் நான்காவது குற்றங்களுக்கான தலா 12 ஆண்டுகள் சிறைத் தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க முடியும். அதனால் எதிரி 27 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார். (எ)

## தேர்தலில்...

அரச தலைவர் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது. தெற்கின் முதன்மைக் கட்சிகள் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசன சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் என்றும், மகிந்த ராஜபக்ச அணியின் சார்பாகக் கோத்தபாய ராஜபக்ச களமிறக்கப்படுவார் என்ற கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி தமது அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பகிரங்கப்படுத்தவில்லை. எனினும் அந்தக் கட்சியின் சார்பாக சஜித் பிரேமதாச களமிறக்கப்படலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

இந்தநிலையில் அரச தலைவர் தேர்தலில் களமிறங்கும்பட்சத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளீர்கள் என்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் களமிறங்குவதற்கு எந்நேரமும் தயாராக இருக்கின்றேன். கட்சியின் உயர்பீடத்தின் அனுமதிக்காகவே காத்திருக்கின்றேன்.

ஆட்சிக்கு வந்ததும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஓரணியில் கொண்டுவருவதே எனது முதல் இலக்காக இருக்கும். நாட்டில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வை உருவாக்குவேன். ஆட்சிக்கு வந்ததும் இதுவே எனது முதலாவது செயற்பாடாக இருக்கும். வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் ஏகபிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, அனைவருக்கும் பொருத்தமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதே எனது நிலைப்பாடாக உள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து இடங்களிலும் மத வன்முறைகளை உருவாக்கும் நோக்குடன் செயற்பாடுகள் முன்னெடுன்னப்பட்டுவருகின்றன. அவற்றுக்கு முடிவு கட்டி அனைத்து இன மக்களும் சுபீட்சமாக வாழ வழிசெய்யப்படும். எனது தந்தையின் வழியில் எனது மக்கள் பணி தொடரும்- என்றார்.

அதேவேளை, கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தீர்வுக்கு மிக மிக நெருங்கி வந்துவிட்டதாகக் குறிப்பிட்டதுடன், இன்னும் இரண்டு வருடங்களுக்கு இடையில் தீர்வை அடைந்துவிட முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

தமிழர்கள் எதிர்பார்க்கின்ற அதிகாரப் பகிர்வு சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஏனையவர்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இருக்கவேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (எ-22)

## எல்லாப்...

வேண்டும். அங்குள்ளவர்கள் அதனைச் செய்யலாம்தானே. எல்லாப் பழியையும் நானா ஏற்றுக் கொள்வது? இவ்வாறு கேள்வி எழுப்பினார் அமைச்சர் மனோகணேசன்.

அரச தலைவருக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில், முல்லைத்தீவு நீராவியடியின் அமைக்கப்பட்ட விகாரை, எந்தவொரு தொல்பொருள் வரலாறையும் உடையது அல்ல என்று தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் கூறியிருந்தார். தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் கூறியதற்கு அமைவாக, அந்த இடத்திலிருந்து விகாரையை அகற்றுவதற்கு அரச தலைவரிடம் ஏன் கேட்கவில்லை என்று அமைச்சர் மனோகணேசனிடம் கேட்டபோது,

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து உண்மையை வெளிக் கொண்டு வந்துவிட்டேன். தொல்பொருள் சின்னங்கள் இருப்பது வீதியின் மறுகரையில் என்று கூறினார். விகாரையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மாத்திரம் ஏன் என்னிடம் கேட்கின்றீர்கள். அங்குள்ளவர்கள் கதைக்கலாம்தானே. எல்லாப் பழியையும் நானே ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும்? விகாரை கட்டி முடிக்கும் வரையில் அங்குள்ள பிரதிநிதிகள் ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை. கட்ட முதலே தடுத்திருந்தால் நிறுத்தியிருக்க லாம்தானே? இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார். (ஒ.5,26)

## நல்லூருக்குச்...

தெரிவித்தார்.

நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. அதிலேயே யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது;

ஆலயச் சூழலுக்குத் தேவையான மணல் தேவை தொடர்பாக வேண்டுகையைத் தருமாறு கடந்த 12ஆம் திகதி கூட்டத்தில் கோரினோம். அந்தக் கோரிக்கைக்கு இன்றே அனுமதி கிடைத்துள்ளது. பந்தல் சேவையாளர்களுக்கு மணல் தேவை எனில் வேண்டுகோள் தர வேண்டும் என்று கோரியிருந்தோம். கோரிக்கை எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இந்தமுறை ஆலயத்துக்குப் பக்தர்கள் நேர்த்திக்காக எடுக்கும் காவடிகள் பருத்தித்துறை வீதியூடாக அனுமதிக்கப்படும். சகல வீதித் தடைகளிலும் பொலிஸார் நிற்பர் என்று அறிவித்துள்ளனர். அனைத்து வாகனங்களும் சங்கிலியன் வீதி ஊடாகவே அனுமதிக்கப்படும். நல்லூர் ஆலய வருடாந்தத் திருவிழாப் பாதுகாப்புத் தொடர்பாக இரு கூட்டங்கள் நடைபெற்றன. ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் கட்டாயம் உடற்பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். என்றார்.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்ததாவது:

பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்படும். அவற்றால் ஏற்படும் அசௌகரியத்துக்கு நாம் பொறுப்பேற்க முடியாது. உற்சவத்தைக் கருதி 40 சிறப்புத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவர். பாதுகாப்புத் தொடர்பாக இன்னுமொரு கூட்டமும் நடைபெறும். நுழைவு பாஸ் அனுமதி வழமையை விட அரைவாசியாகக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். அதனால் எவரும் பரிந்துரைக்காக வர வேண்டாம். என்றார்.

ஆலயச் சூழல் மற்றும் அயல் பிரதேசத்தில் திருவிழா நடைபெறும் 25 நாள்களும் தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். மின்சாரம் தடைப்பட்டால் மாற்று ஏற்பாட்டுக்காக மின்பிறப்பாக்கி ஒன்று கொழும்பில் இருந்து தருவிக்கப்படுகின்றது. ஆலயத்தில் அமைக்கும் கடை உரிமையாளர்கள் எந்தக் காரணம் கொண்டும் சிறிய மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்த முடியாது என இலங்கை மின்சார சபையினர் தெரிவித்தனர்.

ஆலயத்துக்கு வரும் பல்லாயிரக்கணக்கான மக்களை நேரம் தாழ்த்தாது, இடையூறு ஏற்படுத்தாது விரைவாக அனுமதிக்கும் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும். அதில் ஏதாவது நெருக்கடி ஏற்பட்டு ஆலயப் பெருமைக்குக் களங்கம் ஏற்பட்டால் பொலிஸாரே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன் தெரிவித்தார்.

ஆலயச் சூழலில் பொலிஸாரும், சிலரும் பாதணிகளுடன் நடமாடுவது முன்னைய காலங்களில் அவதானிக்கப்பட்டது. அதைத் தவிர்க்க வேண்டும் என்று சின்மயா மிசன் சைத்தன்ய சுவாமிகள் சுட்டிக்காட்டினார்.

உற்சவ காலத்தில் முடிந்தவரை வர்த்தக நிலையங்களை எவ்வளவு தூரம் பின்னநர்த்த முடியுமோ அவ்வளவு தூரம் பின்னகர்த்த வேண்டும் என்று ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன், நல்லைக் கந்தனின் ஒளிப்படத்தை ஒருபுறமும், மறுபுறத்தில் விளம்பரத்தை அச்சிட்டு வெளியிடவும் இம்முறை அனுமதி வழங்கப்படாது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (எ-105)

## கோதுமை மா...

பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கு உரிய அனுமதியைப் பிறிமா நிறுவனம் பெற்றுக்கொள்ளவில்லை என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது. அதனாலேயே மாவின் விலை அதிகரிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பை அடுத்து பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது என்று பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்திருந்தது. தற்போது அந்த அறிவித்தல் மீளப் பெறப்படுகின்றது என்று அறிவித்துள்ளது. •450 கிராம் பாணின் விலை 65 ரூபாவாகவே இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அவன்கார்ட்...

ணாரத்ன பண்டார மற்றும் முன்னாள் 'ரக்னா லங்கா' தலைவர் விக்டர் சமரவீர ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறி ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட தேசிய பொலிஸ் ஆணையத்தின் செயலர் சமன் திசாநாயக்க தொடர்பாக குற்றப் புலனாய்வு பிரிவு நீதிமன்றத்துக்கு அறிவித்தது. 'அவர் தொடர்பான மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-22)

## வட்டக்கச்சி இளந்தளிர் கிண்ணம் வென்றது

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு சுடர்ஒளி விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்ட சுற்றுத் தொடரில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

சுடர்ஒளி விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மின் ஒளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென்.மேரிஸ் விளையாடடுக்கழக அணி மோதியது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் எந்தவிதமான கோல்களும் பெறப்படவில்லை. இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியின் வீரர் பிலிப் கோல் ஒன்றை பதிவு செய்தார். பின்னர் இரு அணிகளும் இறுதி வரை கோல்கள் போடுவதற்கு முயற்சித்த போதும் மேலதிக கோல்கள் எவையும் பெறப்படாது ஆட்ட முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.(23)





### தேசிய மட்ட கூடைப்பந்தாட்டத்தில்

# வடக்கு மாகாண பெண்கள் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்

தேசிய மட்ட இருபாலருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாண பெண்கள் அணி வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. அநுராதபுரத்திலுள்ள மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதி உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வடக்கு மாகாண பெண்கள் அணியை எதிர்த்து தென்மாகாண பெண்கள் அணி மோதியது. இதில் வடக்கு மாகாண பெண்கள் அணி 67:43 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று றுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 20

தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மன்னார் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில்பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி- 20 துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பேசாலை சென்.விக்ரறி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். கால்பந்தாடட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம் பெற்றவுள்ளது. இதில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயில்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரிகளின் பழைய மாணவர் சங்க அணிகளுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடர் இன்றும் நாளையும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 20

சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் அருட்சகோதரன் கில்லறி ஜோசப் அவர்களின் 100ஆவது பிறந்தநாளைமுன்னிட்டும், கில்லறி விளையாட்டுக்கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முத்தரிப்பு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 20

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி மின்ஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் சிறிஞான வைரவர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*** *** ***

யாழ்ப்பாணம்,ஜூலை 20

பூநகரி கால்பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் முதன் முறையாக நடத்தும் பூநகரி கால்பந்தாட்ட லீக் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் முழங்காவில் விநாயகர் வினளயாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் முதலாவது ஆட்டத்தில் மெசியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குழந்தை யேசு விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரண்டாவது ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துசெந்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மூன்றாவது ஆட்டத்தில் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகஅணி மோதவுள்ளது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம்,ஜூலை 20

அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் திருகுமரன் லஜிதன் ஞாபகார்த்தமாக வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாண மாவட்டரீதியாக நடாத்திய கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டி இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் மின் ஒளியில் இரவு 7:30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக அளவெட்டி அ.மி. த.க பாடசாலை அதிபர் ஜெயசுதன் மற்றும் விளையாட்டு அலுவலர் சி.சிவபாலன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மத்தி கல்லூரி ஆசிரியர் அனிஸ்ரன் மற்றும் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொ. ஆதவன் மற்றும் மதிப்புறு விருந்தினராக ஏ.ஆர். நிறுவனத்தின் உரிமையாளர் அ.நிக்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 20


31ஆவது மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை இளைஞர்கழக மாவட்டச் சம்மேளனத் தலைவர் ப.தர்சன் தலைமையில யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினாரக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட் மற்றும் வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சொ.சுகிர்தன்,மேலதிக அரசாங்க அதிபர் காணி எஸ்.முரளிதரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதிப்பணிப்பாளர் பிரபாத்லி ஜனகே, மதிப்புறு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.பி சரத் சந்ரபால, தேசிய இளைஞர் கழக சம்மேளனத்தின் செயலர் சிகான் கோசிலகன்னாங்கர, ஜனாசிவல் வேக் உரிமையாளர் இ.ஜயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 20

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் கால்பந்தாட்டப் பயிற்றுநர் அமரர்.பி. பத்மநாதன் ஞாபகார்த்தமாக, யாழ்.மாவட்ட ரீதியாக அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 8.00 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.மதியம் 1 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.மாலை 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)




### அரசியல் தலையீடுகள் காரணமாக

# சிம்பாப்வே அணிக்கு தடை விதித்தது ஐசிசி

கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இருந்ததாக கூறி. சிம்பாப்வே அணியை தடை செய்தது பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

சிம்பாப்வே கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகள் ஏற்பட்டது. கடந்த மாதம் சிம்பாப்வே கிரிக்கெட் சபையை அந்த நாட்டு அரசு இடைக்கால தடை விதித்து இடைக்கால குழுவை நியமித்தது.

இது ஐ.சி.சி.யின் விதியை மீறிய செயலாகும். இதனால் சிம்பாப்வே அணியை ஐ.சி.சி. தடை வித்தது. இந்தத் தடை உடனடியாக அமுலுக்கு வருகிறது என்றும், ஐ.சி.சி. நடத்தும் எந்த ஒரு போட்டிகளிலும் சிம்பாப்வே அணி பங்கேற்க முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐ.சி.சி. வழங்கும் நிதிகளும் உடனடியாக முடக்கப்படுகிறது.

இது குறித்து ஐ.சி.சி.உறுப்பினர் ஷசாங்க் மனோகர் தெரிவிக்கையில்;

பன்னாட்டு கிரிக்கெட் அணிக்கு எதிராக ஐ.சி.சி. எப்போதுமே அவசர நிலையில் எந்த நடவடிக்கையும் எடுப்பது கிடையாது. ஆனால் கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதில் ஐ.சி.சி. உறுதியாக இருக்கிறது.

சிம்பாப்வே கிரிக்கெட் சபையில் நடந்துள்ள அரசியல் தலையீடுகள் ஐ.சி.சி. விதிகளை மீறிய செயலாகும். கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் அணி தேர்வுகளில் பாரபட்சம் காட்டப்படுகிறது. ஐ.சி.சி. கொள்கை அடிப்படையில் ஒரு நாட்டில் கிரிக்கெட் சபையில் அரசு தலையீடு இருப்பதை விரும்பாது. இதனால் சிம்பாப்வே கிரிக்கெட் சபைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. விதிகளின்படி சிம்பாப்வே அணி கிரிக்கெட்டை தொடர வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அரசியல் தலையீடுகள் இருக்கும்வரை அவர்களுக்கு அனுமதி அளிக்க முடியாது - என்றார்.

## மாற்று வீரர்கள் துடுப்பாட்டம், பந்துவீச்சில் ஈடுபடலாம்

### ஐசிசி அறிவிப்பு

பதினொருவர் ஆடும் கிரிக்கெட் அணியில் இடம் பிடித்துள்ள வீரருக்கு களமிறங்க முடியாத அளவுக்கு காயம் ஏற்பட்டால், அவருக்குப் பதிலாக மாற்று வீரர் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் ஈடுபட முடியும் என ஐசிசி அறிவித்துள்ளது.

கிரிக்கெட்டில் இதுவரை ஆடும் பதினொருவர் கொண்ட அணியில் இடம் பிடித்த வீரர்கள் மட்டுமே துடுப்பாட்டம், பந்து வீச்சு பணியை செய்ய முடியும். அதில் ஒரு வீரருக்கு காயம் ஏற்பட்டு வெளியேறினால், அவருக்குப் பதிலாக மாற்று வீரர் களமிறங்குவார் ஆனால் அவர் களத்தடுப்பில் மட்டுமே ஈடுபடலாம். மாற்றாக பந்து வீசவோ, துடுப்பெடுத்தாடவோ முடியாது.

இதனால் காயப்படும் வீரர் இடம் பிடித்துள்ள அணிக்கு சிக்கல் ஏற்படும். இதனால் காயம் ஏற்பட்டு வெளியேறும் வீரருக்குப் பதிலாக களமிறங்கும் மாற்று வீரர் துடுப்பெடுத்தாட அனுமதிக்க வேண்டும். அதேபோல் பந்து வீசவும் அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

நீண்ட நாட்களாக இது குறித்து பரிசீலனை செய்து வந்த ஐசிசி நேற்று அனுமதி வழங்கியது. அடுத்த மாதம் இது நடைமுறைக்கு வருகின்றது.

## எங்களது கிரிக்கெட் வாழ்வு முடிவுக்கு வந்து விட்டதா?

### சிம்பாப்வே அணி வீரர்கள் கதறல்

சிம்பாப்வே அணியை பன்னாட்டுப் போட்டிகளில் இருந்து இடைநிறுத்தும் ஐசிசியின் அறிவிப்பு காரணமாக அந்த அணியின் வீரர்கள் மனமுடைந்து போயுள்ளதாக அணி வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சிம்பாப்வே அணியின் சகலதுறை ஆட்டக்காரர் சிக்கந்தர் ராஜா தெரிவிக்கையில்;

நாங்கள் முற்றாக மனமுடைந்துபோயுள்ளோம். எங்களின் பன்னாட்டு கிரிக்கெட் வாழ்க்கை எவ்வாறு இப்படி முடிவுக்கு வரமுடியும் என்பது குறித்து நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம்.

ஐசிசியின் இந்த அறிவிப்பு ஓரிரு வீரர்களுக்கு மாத்திரம் அதிர்ச்சியளிக்கவில்லை. முழு சிம்பாப்வேயுக்கும் அதிர்ச்சியாக அமைந்துள்ளது.

என்னால் இதனை சுலபமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனது அணியின் ஏனைய வீரர்களும் எனது மனோநிலையிலேயே உள்ளனர். நாங்கள் இங்கிருந்து எதை நோக்கி செல்லப்போகின்றோம் இதற்கு ஒரு முடிவுள்ளதா என்று தெரியவில்லை.

ஐசிசி எங்களை இடைநிறுத்தியுள்ளது என மாத்திரம் தெரிவித்துள்ளனர் எத்தனை வருடங்களுக்கு என எவரும் தெரிவிக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு இந்தத் தடை நீடித்தால் பலரின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரலாம். சிம்பாப்வே வீரர்கள் கிரிக்கெட்டை கைவிட்டு விட்டு வேறு வேலைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டுமா? எங்கள் கிரிக்கெட்டையும் எங்கள் வாழ்வாதாரத்தையும் எங்களிடமிருந்து பறித்து விட்டனர் - என்றார்.



## ஷிகர் தவான், விஜய் சங்கர் அறிக்கை சமர்ப்பிப்பு

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி அரையிறுதியோடு வெளியேறியது. இதில் தவான், விஜய் சங்கர் ஆகியோர் இடம் பிடித்திருந்தனர்.

தொடர் நடந்து கொண்டிருக்கும்போது இருவருக்கும் காயம் ஏற்பட்டு அணியில் இருந்து நீக்கப்பட்டனர். உலகக்கோப்பை தொடருக்குப்பின் இந்திய அணி மேற்கிந்தியத்தீவுக்கு சுற்றுப்பயணம்மேற்கொண்டு ஆடுகின்றது.

இந்த நிலையில் உலகக் கிண்ணத் தொடரில் தங்களுக்கு ஏற்பட்ட காயம், அதற்கான சிகிச்சை முறை குறித்த அறிக்கையை இருவரும் தேசிய கிரிக்கெட் அகாடமியில் சமர்ப்பித்துள்ளனர்.

இருவருடைய அறிக்கை மீதும் திருப்தி ஏற்பட்டால் மேற்கிந்தியத்தீவு தொடருக்கான வீரர்கள் தேர்வில் பரிசீலிக்கப் படுவார்கள்.



## சிறந்த ‘நியூசிலாந்தர்’ விருதுக்கு பென்ஸ்டோக்ஸ் பரிந்துரைப்பு

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடியதற்காக இந்த ஆண்டின் சிறந்த 'நியூசிலாந்தர்' விருது வழங்க இங்கிலாந்து வீரர் பென்ஸ்டோக்சை அந்த நாடு பரிந்துரைத்துள்ளது.

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணத் தொடரில் நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் இறுதிப் போட்டியில் மோதின. இதில் இரு அணிகளும் சமநிலையில் ஓட்டங்களைப் பெற்றதால் சுப்பர் பந்துப்பரிமாற்றம் வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் சமநிலையில் இருந்ததால் அதிக பவுண்டரிகள் அடிப்படையில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்துக்காக சிறப்பாக விளையாடிய பென் ஸ்டோக்ஸ் 465 ஓட்டங்களையும், 7 இலக்குகளையும் வீழ்த்தினார். உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதும் பெற்றார்.

பென்ஸ்டோக்ஸ் இங்கிலாந்துக்காக விளையாடினாலும் அவர் நியூசிலாந்தை பூர்வீகமாகக் கொண்டவர். இந்த நிலையில் இந்த ஆண்டின் 'சிறந்த நியூசிலாந்தர்' என்ற விருதுக்கு பென் ஸ்டோக்ஸுக்கும், நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சனும் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் இந்த விருது அமைப்பின் தலைவர் தெரிவிக்கையில்;

பென்ஸ்டோக்ஸ் நியூசிலாந்துக்காக விளையாடாமல் இருக்கலாம். ஆனால் அவர் நியூசிலாந்தில் உள்ள கைறிஸ்ட் சர்ச்சில் தான் அவர் பிறந்தார். அவரது பெற்றோர்கள் தற்போதுவரை இங்குதான் வசிக்கின்றனர்- என்றார்.

## இலங்கை அணி வீரர்கள் இங்கிலாந்து பயணித்த பாதையை பின்பற்றுங்கள்

### சங்கக்கார தெரிவிப்பு

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி கிண்ணத்தை கைப்பற்றியது. அடுத்த உலகக் கிண்ணப் போட்டி இந்தியாவில் 2023 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ளது. அந்த உலக கிண்ண போட்டிகளுக்காகத் தயாராகும் இலங்கை அணி இந்த உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து பயணித்த பாதையை பின்பற்றவேண்டும் என இலங்கை அணியின் முன்னாள் வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

2015ஆம் ஆண்டு உலக கிண்ணப்போட்டிகளில் ஏற்பட்ட அவமானத்தின் பின்னர் இங்கிலாந்து அணி கடந்து வந்துள்ள பாதை எதிர்காலத்துக்காக திட்டமிட விரும்பும் எந்த அணிக்கும் ஒரு சிறந்த பாடம்.

நடைபெற்று முடிந்த உலக கிண்ணத்தை வெல்வதற்கு தாங்கள் விளையாடவேண்டிய விதத்தையும் அதற்கான வீரர்களையும் இங்கிலாந்து அணியினர் இனம்கண்டு கொண்டனர்.

2023 ஆம் ஆண்டு இந்தியாவில் இடம்பெறவுள்ள உலக கிண்ண போட்டிகளுக்காகத் தயாராகும் இலங்கை அணி, இங்கிலாந்து பயணித்த பாதையை பின்பற்றவேண்டும். இந்தியாவில் போட்டிகள் இடம்பெறவுள்ளதால் சூழ்நிலைகள் ஆடுகளங்கள் எங்களுக்கு சாதகமாகவிருக்கும். இலங்கை அணியிடம் திறமையுள்ளது. அதனைப் பயன்படுத்த வேண்டும். நாங்கள் மிகவும் அவதானமாக திட்டமிட்டு முக்கிய குழுவை முன்னரே உருவாக்கவேண்டும்.

இங்கிலாந்தின் வெற்றி மோர்கனின் தலைமைத்துவத்துக்குக் கிடைத்த வெற்றி.

அவர் வீரர்களுக்கு நம்பிக்கையை வழங்கினார். அந்த அணியின் வீரர்கள் தங்களுக்கு உரிய பாணியில் விளையாட அனுமதி வழங்கினார் - என்றார்.



**Spoken English**

அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தைப் பேசிப் பழக
3 மாத பயிற்சிப் பட்டறை (240hrs)
மிகக் குறைந்த கட்டணம் (6000/=)

**English Trainer Training (Teacher Training) Diploma**

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து முழுமையாகக் கற்று
ஆங்கிலத்தைக் கற்க விரும்புபவர்களுக்கு
▾ 4 மாத கற்கைநெறி (320hrs) ▾ மிகக் குறைந்த கட்டணம் (12,000/=)

**IELTS**

Academi & General Training
Above - 6.5 band
▾ 3 Months (240 hrs) ▾ Course Fees - 20,000/=

ஆரம்பம்:- 25.07.2019 வியாழன் - 8.30 am to 12.30 pm (Weekdays)
27.07.2019 சனி - 8.30 am to 12.30 pm (Weekends)

**ELAS**
Sir Pon Ramanathan Road, Thirunelvely,
Jaffna.(பல்கலை எதிரில்)
076 697 3040/ 076 223 5678/ 021 221 2410

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 674
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.07.19
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 71,335,280/-
வெற்றி இலக்கங்கள்
07 20 31 48 O
அபிவிருத்தி லொத்தர் சபை
0114 825 825

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் ▸ 1007
சீட்டிழுப்பு திகதி ▸ 2019.07.18 வியாழக்கிழமை
D 34 56 58 65
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 67,929,472/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 789
சீட்டிழுப்பு திகதி 19.07.2019
வெற்றி இலக்கங்கள்
03 14 21 27 W
அடுத்த வெள்ளி கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 28, 804,284/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 23.07.2019 ஆம் திகதி செவ்வாய் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 19.07.2019 | 2564 | நீலம் |

இடபம்
வெற்றி இலக்கங்கள்
31 44 52 62
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,124,840/=
21.07.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



தேசிய மட்ட கூடைப்பந்தில்

# வட மாகாண ஆண்கள் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி

யாழ்ப்பாணம்,ஜூலை 20
தேசிய மட்ட இருபாலருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் ஆண்கள் பிரிவினருக்கான அரையிறுதியாட்டத்தில் வடக்கு மாகாண ஆண்கள் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அனுராதபுரத்தில் அமைந்துள்ள மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதி உள்ளகரங்கில் நேற்று இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வடக்கு மாகாண ஆண்கள் அணியை எதிர்த்து கிழக்கு மாகாண ஆண்கள் அணி மோதியது இதில் வடக்கு மாகாண ஆண்கள் அணி 66 : 60 என்ற புள்ளிகள் அடிப்படையில் அபார வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.(23)

## தேர்வுக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

உலகக் கிண்ணத் தோல்விக்கு பிறகு இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவுக்கு அடுத்த மாதம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20, மூன்று ஒருநாள் போட்டி மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.
இந்த தொடருக்கான இந்திய அணித் தேர்வு நேற்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் அந்தக் கூட்டம் இறுதி நேரத்தில் நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டது. இன்று அல்லது நாளையே தேர்வுக் குழுவுக்கான கூட்டம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வீரர்களின் உடற்தகுதி தொடர்பான அறிக்கைகள் இன்றுதான் கிடைக்கும் என்பதால் தேர்வுக் குழு கூட்டம் இடம் பெறவில்லை என கூறப்பட்டது.

# பங்களாதேஷ்க்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு

உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான பங்காதேஷ் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று இலங்கை அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதில் முதலாவது போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதியும், இரண்டாவது போட்டி 28ஆம் திகதியும், மூன்றாவது ஒருநாள் போட்டி 31ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது. இந்த மூன்று ஒருநாள் போட்டிகளிலும் பகலிரவு ஆட்டமாக கொழும்பு, ஆர்.பிரேமதசா மைதானத்தில் இடம்பெறும்.
அறிவிக்கபட்ட இலங்கை அணி வீரர்கள்:
திமுத் கருணாரத்ன (அணித் தலைவர்), குசல் ஜனித் பெரேரா, அவிஷ்க பெர்னாண்டோ, குசல் மெண்டீஸ், அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, சேஹான் ஜெயசூரிய, தனஞ்சய டிசில்வா, நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க, தசூன் சானக்க, வஹிந்து ஹசரங்க, அகில தனஞ்சய, அமில அபோன்சு, லக்ஷான் சந்தகான், லசித் மலிங்க, நுவான் பிரதீப், கசூன் ராஜித, லஹிரு குமார, திஸர பெரேரா, இசுறு உதான மற்றும் லஹிரு மதுசங்க ஆகிய 22 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

இலங்கை திட்டமிடல் சேவை தரம்-3 இற்கு எமது நிறுவனத்தில் பயின்று தெரிவு செய்யப்பட்ட இவர்களை வாழ்த்துகின்றோம்

கிருஸ்ணாலினி வேலாயுதம்
தேசிய நிலை -08
Best Wishes



பிரிந்தினி பரமசிவம்
தேசிய நிலை -24
Best Wishes



இலக்கியா கிருஸ்ணபிள்ளை
தேசிய நிலை -39
Best Wishes



மேலும் இவர்களை வழிப்படுத்திய தேசிய முதல்நிலை வளவாளர்
P.கமல்தாசன் (SLPS)
அவர்களையும் மற்றும் துறைசார் வளவாளர்களையும் வாழ்த்துகின்றோம்

Note:- தெரிவு செய்யப்பட்ட 5 பேரில் ஏனைய இருவரும் SLAS பரீட்சையில் சித்திபெற்றவர்கள் ஆவர். SLAS பரீட்சையில் 27 பேர் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

நாவலர் கல்வி நிலையம்
ஆனைபந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 111 6739

**வேலையாள்கள் தேவை**
ஹொட்டல் ஒன்றுக்கு சப்பிளேயர் (Waiters) தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
077 450 8003

**சிவப்பு மணல் விற்பனைக்கு**
பள்ள நிலங்கள் சீர் செய்வதற்கும், கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் உகந்த சிவப்பு நிற சுத்தமான மணல் எம்மிடம் விற்பனைக்குண்டு.
தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்துக்கே குறைந்த • விலையில் கொண்டு வந்து இறக்க முடியும்.
தொடர்புகளுக்கு:- 077 940 0963
077 790 6291

## டேபிள் ரென்னிஸ் உரிமையாளராக தனுஷ் மனைவி ஐஸ்வர்யா

ரஜினியின்மகளும், நடிகர்தனுஷின்மனைவியுமான ஐஸ்வர்யா டேபிள் ரென்னிஸ் சென்னை லயன் அணியின் இணை உரிமையாளர்களில் ஒருவராக இணைந்து உள்ளார். ஐஸ்வர்யா சினிமாப் படங்களை தயாரித்து வருவதில் ஆர்வத்தைக் காட்டி வந்த இவர் திடீரென விளையாட்டு துறையிலும் கவனத்தை திருப்பி உள்ளார்.
டேபிள் ரென்னிஸ் சென்னை லயன் அணியின் இணை உரிமையாளர்களில் ஒருவராக இவர் இணைந்து உள்ளார்.
எதிர்வரும் 25ஆம் திகதி முதல் டெல்லியில் 2019ஆம் ஆண்டுக்கான அல்டிமேட் டேபிள் ரென்னிஸ் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.